# கம்ப்யூட்டர் எக்ஸ்பிரஸ்

Computer Express

மலர் 03 இதழ் 09 செப்டெம்பர் 15-09-2004 விலை 23/=

கண்ணீரை வரவழைக்கும் நிகழ்வுகள்...!

சிங்கப்பூரில் ஏழாவது தமிழ்
இணைய மாநாடு...!

உள்ளங்கை கம்ப்யூட்டர் வாங்கலாமா?

பழைய கம்ப்யூட்டரின்
புதிய பயன்பாடுகள்

டொமைன் நேம் சிஸ்டம்

அணுகுண்டைத் தயாரித்தவர் யார்?

இலங்கையின் முதற்தர கணனிச்சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்ப்யூட்டர் எக்ஸ்பிரஸ்

## அணுகுண்டு தயாரித்தது யார்?



*இன்று எந்த நாடும் தன் பாதுகாப்பிற்காகவும் பக்கத்து நாடுகளைப் பயமுறுத்தவும் அணு குண்டுகளைத் தயாரித்து தங்கள் வல்லமையைக் காட்டுகின்றன. இதற்கு வித்திட்டது யார் தெரியுமா? அல்பேட் ஐன்ஸ்டீன். பல அறிவியல் கண்டு பிடிப்புகளுக்கு வழி காட்டிய ஐன்ஸ்டீனை அணுகுண்டு தயாரிக்க பிள்ளையார் சுழி போட்டதாகவும் குற்றம் சாட்டலாம். இந்த விபரங்களை www.dannen.com/ae-fdr.html என்ற இணையத்தள முகவரி தருகின்றது. 1939 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாகப் பணியாற்றியபோது ஓர் அணுகுண்டைத் தயாரித்து எப்படிப் பயன்படுத்தலாம் என்று ஜன்ஸ்டீன் எழுதிய கடிதம் ஒரிஜினலாகத் தரப்பட்டுள்ளது. இந்த ஒரு குண்டினைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட பகுதியையோ அல்லது சார்ந்த அனைத்துப் பகுதியையோ அதன் ஜீவராசிகளோடு அழிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*அவர் அந்தக் கடிதத்தை எழுதிய போது அமெரிக்கா எந்த போரிலும் ஈடுபடாமல் இருந்தது. ஆனால் அந்தக் கடிதம் எழுதப்பட்டு ஆறு ஆண்டுகள் கழித்து அமெரிக்கா ஜப்பானின் துறை முகங்களான நாகசாகியிலும் ஹிரோசிமாவிலும் குண்டுகளைப் போட்டது. அதனால் ஏற்பட்ட நாச விளைவு உலகத்தின் சரித்திரத்தில் கறுப்புப் பக்கமாக மாறியது அனவரும் அறிந்ததாகும். மேலும் விபரங்களுக்கு மேற்படி தளத்தினைக் காணவும்.*

### தொடர்கள் - கணனித் தொகுப்புகள்

**ஈ கொமர்ஸ் ......................11**

இன்ரர்நெற் இந்த நொடியில் ஒரு தகவலைச் சொன்னால் ...

**ரலி ..............................22**

*Company Information* களைப் பராமரிக்கப் பின்வரும் ...


**போட்டோ ஷொப் .................28**


அனேகமானோரின் கவலை Corel Draw ஐப் போன்று ....

### தொடர்கள் - கணனி மொழிகள்

**எச்.ரி.எம்.எல். ...................30**

*MS-Word* இல் உருவாக்கிய போலத் தான் இதுவும் ...





சகல தொடர்புகளுக்கும்

**கம்ப்யூட்டர் எக்ஸ்பிரஸ்**

இல. 07, 57ஆவது ஒழுங்கை,
(உருத்திரா மாவத்தை ஊடாக)
கொழும்பு-06. இலங்கை.
தொலைபேசி : 01-2361381, 0777-222422

E.mail : info@comxpress.info
Website: www.comxpress.info





"THE COMPUTER SAYS I NEED TO UPGRADE MY BRAIN TO BE COMPATIBLE WITH ITS NEW SOFTWARE."

AIZEN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப்யூட்டர் எக்ஸ்பிரஸ்
மலர் 3 செப்ரெம்பர் 15 2004 இதழ் 9

## அன்பிற்கினிய வாசகர்களிற்கு!

வளர்ந்து செல்லும் இக்கணனி யுகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் பெரும் சவால்களை சந்தித்து வரும் இக்காலகட்டத்தில், வாசகர்களாகிய உங்களின் தொழில்நுட்ப அறிவியல் தேவையை நிறை செய்யும் நோக்கோடு கடந்த 3 ஆண்டுகளாக பல சிறப்பம்சங்களைத் தாங்கி வந்துகொண்டிருக்கின்றது. அத்துடன் உங்கள் வீட்டு ஆசானாக இருந்து உங்களை வழிநடத்தும் உங்கள் கம்ப்யூட்ட[illegible] எக்ஸ்பிரஸ் சஞ்சிகை மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் பே[illegible]

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் அதன் எழுச்சிக்கும் அறிவியல் இன்று மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. எமது தமிழ் பேசும் மக்கள் எழுச்சி பெற்றதாக மாற வேண்டுமாயின் அறிவியலில் சாதனை படைக்க வேண்டும். சமூகத்தின் மீது அக்கறையுள்ள நாம் தமிழ்மொழி மூலம் இந்தச் சஞ்சிகையை நாட்டின் பொருளாதார நெருக்கடியிலும் வெளியிடுகிறோம் என்றால் அது உங்கள் மீது [illegible] ட பற்[illegible]

எனினும் மிகக் குறைந்த செலவில் வெளியிடப்படும் இச்சஞ்சிகை உங்கள் வீட்டின் கணனி ஆசானாக என்றும் திகழும் என்பதால் நாம் உறுதியுடன் செயற்படுகின்றோம். உங்கள் தகவல் தொழில்நுட்ப அறிவியல் தேட்லுக்கு வழிகாட்டியாக நாம் என்றும் இருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

உங்களின் முன்னேற்றமே எமது நோக்கம்

நன்றி.

-ஆசிரியர்



# றமணனின் புதிய வெளியீடு

தமிழ் மூலம்


# FLASH & ANIMATION

கணனியுலகில் தமிழர்களின் தனித்துவத்தை அறிந்து அவர்களின் அறிவுப் பசிக்கு தீனிபோடும் வகையில் றமணனின் Flash & Animation தொகுப்பு பற்றிய நூல் வெளி வந்துள்ளது. அன்று தொட்டு இன்று வரை தொடர்ச்சியாகப் பல கணனி நூல்களை தமிழில் எழுதி அனைவரையும் கணனியுலகிற்கு அழைத்துச்சென்ற இவரின் Flash & Animation என்ற தொகுப்பை மிகத் துல்லியமாகவும் தெளிவாகவும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் வெளி வந்தது தான் மிகச் சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. இது இன்று Animation துறையில் ஆர்வமுள்ள அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டிய இந்நூல் 164 பக்கங்களைக் கொண்டதாகவும், அவருடைய ஏனைய புத்தகங்களைப் போன்று ஒவ்வொரு மெனுக்கள் தொடர்பாக விரிவாக எழுதப்பட்டுள்ளதுடன் பல Animation பயிற்சிகளையும் கொண்டு காணப்படுகின்றது. மிகக் குறைந்த விலையில் 220/= விற்கு இப்போது நாடெங்கும் உள்ள அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். எமது வாசகர்களும் இப் புத்தகத்தை வாங்கி வாசித்து பயன்பெறுமாறு வேண்டுகின்றேன்.

***

# Excel Worksheet இல் நாளும் நேரமும்

எக்செல் வேர்க்ஷீட்டில் செயல்படுகையில் ஏதேனும் ஒரு செல்லில் நேரம் மற்றும் நாளினைக் குறிப்பிட விரும்பு வோம். இதற்குத் தனியாக அதனை ரைப் செய்ய வேண்டியதில்லை. அன்றைய தேதியை செல்லில் அமைத்திட Ctrl + ; (செமிகோலன்) அழுத்தினால் போதும். அப் போதைய கம்ப்யூட்டர் நேரத்தை செல்லில் அமைத்திட Ctrl + Shift + : (கோலன்) அழுத்தவும். இவ்வாறு நேரத் தையும் நாளினையும் அமைத்தால் அவை அப்படியே இருக்கும். பைலை மீண்டும் அமைத்திடும் நாளுக்கு மாறாது. அப்படியானால் பைலைத் திறக்கும் நாள் மற்றும் நேரத்திற்கு அவை மாற வேண்டும் என்றால் என்ன செய்திட வேண்டும் என நீங்கள் எண்ணலாம். = today( ) (வலது இடது பிரக்கற் குறிகள்) என்ற கட்டளையை அல்லது formula வை அமைக்கவும். பைலைத் திறக்கும் போது உள்ள தேதி கிடைக்கும். = now ( ) என்ற formula வை அமைத்தால் அன்றைய தேதியும் அப்போதைய நேரமும் பதியப்படும்.




### உள்ளங்கைக்குள் அடங்குகின்ற CD Disk இற்கு தனி ட்ரைவ் உண்டா?

சிறிய சீ.டி றொம் (Mini CDR) என அழைக்கப் படுகின்ற அந்த டிஸ்க்கில் 185MB அளவில் டேற்றாவைப் பதிக்க முடியும். 8 செ.மீ விட்டம் கொண்ட அந்த டிஸ்க்கினை வழக்கமான சி.டி-றொம் ட்ரைவில் போட்டுப் படிக்கலாம். அது போல் CD writer இன் உதவியால் இந்த மினி டிஸ்க்கில் டேற்றாவை எழுதலாம். படிக்கலாம். படிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கம்ப்யூட்டர் தரும் பிரச்சனைகள்

வாழ்க்கையின் ஓர் அங்கமாக மாறிவிட்ட கம்ப்யூட்டரை இன்று நாம் அவசர அவசரமாக வாங்கிப் பயன்படுத்தத் தொடங்குகின்றோம். ஆனால் அதனைப் பயன்படுத்துகையில் நம் மனதிற்கும் உடலுக்கும் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்று அறியாமல் பல பிரச்சனைகளால் பாதிக்கப்படுகின்றோம். அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

வெயிலிலும் மழையிலும் ஓடியாடி விளையாடி வெட்டியாகக் கழிக்கிறானே தனது 8 வயது மகன் என்று நினைத்த நண்பர் ஒருவர் அவனுக்கு கம்ப்யூட்டர் வாங்கிக் கொடுத்தார். நண்பர் எதிர்பார்த்த படி விளையாட்டை விட்டு எந்நேரமும் கம்ப்யூட்டரிலேயே அந்தப் பையன் காலத்தைக் கழித்தான். இப்பொழுது சோடாப்போத்தல் கண்ணாடியுடன், முதுகு வலியால் அந்தப் பையன் அவதிப்படுவதைக் கேள்விப்பட்டவுடன் வருத்தமாகத்தான் இருந்தது.

ரைப்பிஸ்ற் வேலை பார்த்த நண்பர், ரைப் ரைட்டிங் மெஷினுக்குப் பதில் கம்ப்யூட்டரை அவன் அலுவலகத்தில் கொடுத்தவுடன் மகிழ்ந்தார். முன்பை விட ஒரு நாளைக்கு அதிகப் பக்கங்களை கம்ப்யூட்டர் மூலம் அவர் ரைப் செய்து கொடுத்தார். அலுவலக முதலாளியும் மகிழ்ந்தார். முன்பை விட ஒரு நாளைக்கு அதிகப் பக்கங்களை கம்ப்யூட்டர் மூலம் அவர் ரைப் செய்து கொடுத்தார். அலுவலக முதலாளியும் மகிழ்ந்தார். Cervical Spondylitis நோயால் நண்பர் இப்பொழுது அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றார்.



மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் மாதிரிகள் தான். ஏராளமானோர் கம்ப்யூட்டரால் நோய்வாய்ப் பட்டிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. நமது உடல் ஆரோக்கியத்துக்கு கம்ப்யூட்டர் எதிரிகளா? இல்லவே இல்லை. கம்ப்யூட்டரைச் சரியாக நாம் பயன்படுத்தவில்லை. தவறு நம்மேல் தானே தவிர கம்ப்யூட்டர்மேல் இல்லை.

## தொழில் சார்ந்த தீங்குகள்

எந்நேரமும் கம்ப்யூட்டர் மொனிட்டரை உற்று நோக்கிக் கொண்டிருப்பதால் கண்கள் தான் முதலில் பாதிக்கப்படுகின்றன. இரண்டாவது பாதிப்பு முதுகெலும்புக்கு Carpel Tunnel Syndrome (CTS) மற்றும் Repetitive Stress/Strain Injury (RSI) போன்ற உடல் உபாதைகள் கம்ப்யூட்டரால் நிகழ்கின்றன. தோளில் இருந்து கை விரல்கள் வரை வலி அல்லது உணர்ச்சியின்மை, மணிக்கட்டில் திறனின்மை, கைகளால் எதையும் பிடிப்பதில் ஏற்படுகின்ற நடுக்கம், இரவில் அடிக்கடி விழிப்புப் போன்றவை கம்யூட்டர் பயனாளர்களுக்கு ஏற்படுகின்றன. கைகளின் தசைநார்களில் ஏற்படுகின்ற அழற்சி CTS நோயின் முக்கிய அறிகுறி ஆகும். வலி, விறைப்பு, வீக்கம், உணர்ச்சியின்மை, கூச்சம் போன்றவை கைகள், தோள்கள், முதுகு மற்றும் கழுத்து போன்றவற்றில் ஏற்பட்டால் அவை RSI நோயின் முக்கிய அறிகுறிகளாகும். மேற்படி நோய்கள், செய்யும் தொழிலால் ஏற்படுவதால் இவற்றை Occupational Hazards என்பர்.

## நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்

"வருமுன் காப்போம்" என்ற கொள்கையை எல்லோரும் பின்பற்றினால் போதுமானது. CTS, RSI நோய்கள் வராமல் தடுக்க சில ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன.

1) தோள்களைத் தளர்வாக விடுங்கள்

2) முழங்கைகளை அவ்வப்போது சுழற்றுங்கள்

3) மணிக்கட்டை நேராக, மேஜைக்கு இணையாக வைத்து ரைப் செய்யுங்கள்.

4) மொனிட்டரின் மேல் விளிம்பு, நீங்கள் நேராக உட்கார்ந்திருக்கும் போது தெரிய வேண்டும். அவ்வாறு தெரியாவிட்டால் உங்கள் இருக்கையின் உயரத்தைக் கூட்டுங்கள் / குறையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) மொனிட்டருக்கும் உங்கள் கண்களுக்கும் இடையே உள்ள தூரம் குறைந்தது 60 சென்ரிமீற்றர் இருக்க வேண்டும்.

6) எப்பொழுதும் இருக்கையின் நேராக உட்காருங்கள். குனிந்து மொனிட்டரைப் பார்க்காதீர்கள். நேராக உட்கார்ந்து கொண்டு, தலையைக் குனியாமல், நிமிராமல் மொனிட்டரைப் பார்க்க வேண்டும்.

7) இருக்கையின் பின் பக்கம் எப்பொழுதும் முதுகு ஒட்டிக்கொண்டு இருக்க வேண்டும்.

8) கால் பாதங்கள் எப்பொழுதும் தரையில் பட்டுக்கொண்டிருக்க வேண்டும்.

9) ஒவ்வொரு மணி நேர வேலைக்கும் 5 நிமிட ஓய்வு கொடுங்கள். அந்த 5 நிமிடத்தில் கம்ப்யூட்டரை விட்டு விட்டு மெதுவாக அலுவலகம் உள்ளே நடந்து செல்லுங்கள். விரல்களை மடக்கி விடுங்கள். சோம்பல் முறியுங்கள்.

10) கண்களை அடிக்கடி சிமிட்டுங்கள். இதனால் கண்கள் உலர்வதைத் தடுக்கலாம்.

11) ஒவ்வொரு அரை மணி நேர வேலைக்கும் 2 நிமிடங்கள் மொனிட்டரை விட்டு வெளியே தூரத்தில் உள்ள பொருளை உற்று நோக்கி அப்படியே அருகிலுள்ள பொருளின் மேல் பார்வையை ஓட விடுங்கள். கண்களுக்கு இது நல்ல பயிற்சியாகும்.

12) அடிக்கடி தண்ணீர் குடியுங்கள்

13) சத்தான உணவைச் சாப்பிடுங்கள்

14) Ergonomics முறையில் வடிவமைக்கப்பட்ட கீ போர்ட், மவுஸ், கம்ப்யூட்டர் நாற்காலி ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.

15) நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில் அமர்ந்து பணியாற்றுங்கள். நீங்கள் உட்கார்ந்துள்ள அறை குளிரூட்டப்பட்டது என்றால், முன்பு குறிப்பிட்ட 5 நிமிட ஓய்வை அறைக்கு வெளியே காற்றோட்டம் உள்ள இடத்தில் எடுங்கள்.


16) நல்ல உடற்பயிற்சியை அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ மேற்கொள்ளுங்கள்.

கம்ப்யூட்டரை நம் வாழ்க்கையில் தவிர்க்க முடியாது. ஆனால் கம்ப்யூட்டரால் விளைகின்ற இன்னல்களை நம்மால் தவிர்க்க முடியும். உங்கள் ஆரோக்கியம் உங்கள் கையில் தான் உள்ளது. மேலே குறிப்பிட்ட செயல்களை ஒழுங்காக கடைப்பிடித்தால் வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்றி விடலாம்.

# இரண்டு கீகளை இணைத்து அழுத்த சிரமமா?

கம்ப்யூட்டரில் பல பயன்பாடுகள் இரண்டு கீகளை இணைந்து அழுத்துவதன் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. எடுத்துக் காட்டாக Ctrl + C இணைந்து அழுத்தினால்தான் தேர்ந்தெடுக்கப் பட்ட ரெக்ஸ்ட் கொப்பி செய்யப்படும்.


ஆனால் பலர் இப்படி இணைந்தவாறு கீகளை அழுத்த இயலாமல் இரண்டாவது கீயை மட்டுமே அழுத்துவார்கள். அதாவது இரண்டாவது கீயை அழுத்துகையில் முதல் கீயை விட்டு விடுவார்கள். இவர்களுக்காகவே முதல் கீயை அழுத்திய பின்னர் சிறிது நேரம் கழித்து அடுத்த கீயை அழுத்தினாலும் அதனை இணைத்து எடுத்துக்கொள்ளும் வகையில் பயன்பாட்டை அமைத்திட வழி உள்ளது. இந்தப் பயன்பாடு "ஸ்டிக்கி கீஸ்" என அழைக்கப்படுகிறது. இதனை அமைத்திட கீழ்க் குறிப்பிட்டவாறு செயல்படவும் கொன்ட்ரோல் பனல் சென்று (Start => Settings => Control Panel) அதில் உள்ள "Accessibility Options" என்ற பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். பின் அதில் "Keyboard" என்ற ரேபிள் உள்ள "Use Sticky Keys" என்ற பிரிவின் முன் உள்ள சிறு கட்டத்தில் ரிக் செய்திடவும். இதனை அமைத்தபின் நீங்கள் இரு கீகள் இணைந்த பயன்பாட்டை மேற்கொள்ள ஒவ்வொன்றாக அடுத்தடுத்து அழுத்தலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீரை வரவழைக்கும் நிகழ்வுகள



இளம் தளிர்களைக் காவு வாங்கிய கும்பகோணம் தீ விபத்து இன்னும் எத்தனையோ சந்ததிகளால் பேசப்படும். அதே போல உலகெங்கும் பல நிகழ்வுகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. சரித்திரத்தில் பல சம்பவங்கள் அது போல உண்டு. எடுத்துக் காட்டாக அடோல்ப் ஹிட்லர் தான் வெறுத்த யூதர்களை கொன்றதனைக் கூறலாம். ஏறத்தாழ ஒரு கோடியே பத்து லட்சம் யூதர்கள் வன்கொலையால் மரணமடைந்தார்கள். ஏன் அவ்வளவு பின்னால் போக வேண்டும். 1996 இல் விஷ வாயு செலுத்தி மக்களைக் கூட்டம் கூட்டமாகக் கொன்று குவித்த சம்பவங்களும் உண்டு. இவற்றைப் புகைப் படங்களாக எடுத்து <www.remember.org/camps> என்னும் முகவரியில் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த புகைப்படங் களுக்கான விளக்க வரிகள் நம் கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றன.

## Word இல் வரிசைப்படுத்த

Word தொகுப்பில் ரெக்ஸட் டொக்கியூமென்ட் ஒன்று தயாரிக்கையில் வரிசையாகப் பலரின் பெயர்கள் அல்லது பொருட்களின் பெயர்களை ரைப் செய்கிறீர்கள். பின் ஐயோ! இவற்றை எக்செல் வேர்க் ஷீற்றில் அடித்திருந்தால் வரிசைப்படுத்தி யிருக்கலாமே என்று உங்களையே நொந்து கொள்கின்றீர்களா? அதெல்லாம் வேண்டாம். வேர்ட் ரெக்ஸ்ற்றிலும் வரிசைப்படுத்தலாம். ரெக்ஸ்ட் அடித்த பின் வரிசைப்படுத்த வேண்டிய ரெக்ஸ்ட் லிஸ்ட்டை முதலில் தேர்ந்தெடுக்கவும். பின் Table மெனு சென்று Sort பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். இதில் மேலாக எழும் கட்டத்தில் Ascending அல்லது Descending என்ற பிரிவுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஓ.கே கிளிக் செய்திடவும். Ascending தேர்ந்தெடுத்தால் பட்டியலில் உள்ள பெயர்கள் A முதல் Z ஆக வரிசைப்படுத்தப்படும். Descending தேர்ந்தெடுத்தால் Z முதல் A ஆக வரிசைப் படுத்தப்படும்.

## Windows 2000 இல் Dos Prompt

Windows 2000 மற்றும் Windows XP தொகுப்புகளில் டொஸ் ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தின் கட்டளைப்புள்ளி (Command Prompt) யைத் தேடினால் வழக்கம் போல அது கிடைக்காது. ஏனென்றால் இந்த இரண்டு தொகுப்புக்களில் எம்.எஸ் டொஸ் ஒப்பரேட்டிங் சிஸ்ரம் இல்லை. ஆனால் டொஸ் சிஸ்ரம் போல ஒன்று இந்தத் தொகுப்புக்களில் தரப்பட்டுள்ளது. இதன் Command Prompt ஐ நீங்கள் பெற்று இயக்கலாம். இதற்கு Start கிளிக் செய்து Program => Accessories என்ற பிரிவுக்குச் செல்லவும். அங்கு Command Prompt என்பதை தேர்வு செய்தால் உடனே உங்களுக்கு வழக்கம் போல டொஸ் கட்டளைப் புள்ளி கறுப்பு திரையில் கிடைக்கும். அல்லது Start சென்று Run பொக்ஸில் "CMD" என ரைப் செய்து ஓ.கே கிளிக் செய்தால் இதே டொஸ் கட்டளைப்புள்ளி கிடைக்கும்.

## Win XP யில் Scan Disk வசதி


தற்போது பிரபலமாகி வரும் வின்டோஸ் எக்ஸ்பி தொகுப்பில் ஸ்கான் டிஸ்க் வசதி முன்பு போல் கிடைப்பதில்லை. பலரும் இவ் வசதி இதில் தரப்படவில்லை என்றே எண்ணுகிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. இந்த வசதி "Error Checking" என்னும் புதிய பெயரில் தரப்பட்டுள்ளது. இதனைப் பெற "My Computer" ஐக்கனைக் கிளிக் செய்து அதில் "சி" ட்ரைவ் செல்லுங்கள். பின் அதில் உள்ள "Properties" என்ற பிரிவிற்குச் செல்லவும். அதில் "Tools" என்ற பிரிவு கிடைக்கும். இங்கு தான் "Error Checking" உள்ளது. அது மட்டுமன்றி இங்கு Defrag வசதியும் தரப்பட்டுள்ளது.

**வின்டோஸ் எக்ஸ்பியை நீங்கள் Activate செய்துவிட்டீர்களா? இல்லையா? என்பதைக் கண்டுபிடிக்க...**

**Start => Run** கட்டளையைக் கொடுத்து, பின்பு **oobe/msoobe/a** என்ற கட்டளையை ரைப் செய்து என்ரர் கீயை அழுத்துங்கள். ஏற்கனவே அக்ரிவேற் செய்யப்பட்டிருந்தால் அது பற்றிய விபரம் கிடைக்கும். இல்லையேல் அக்ரிவேற் செய்ய வழி கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தகவல் தொழில்நுட்பத்தில் வினாக்களும் விளக்கங்களும்



***கேள்வி :-*** *ஒவ்வொரு **Hard Disk Partition** இல் எவ்வளவு இடம் பயன்படுத்தப்பட்டுள்ளது, எவ்வளவு இடம் காலியாக உள்ளது என **Pie chart** ஆக விண்டோஸ் காட்டுகிறது. எனக்கு ஒவ்வொரு பைலும் அல்லது போல்டரும் எவ்வளவு இடத்தைப் பிடித்துள்ளன என்பதை சார்ட்டில் பார்க்க ஆசை. முடியுமா?*

**பதில் :-** www.jamsoftware.com என்ற தளத்தில் நுழைந்து Tree size professional என்ற சொப்ட் வெயாரை டவுண்லோட் செய்யுங்கள். உங்கள் ஆசையை இது நிறைவேற்றும்.

***கேள்வி :-*** *விண்டோஸ் எக்ஸ்பி கம்ப்யூட்டரில் பல யூசர்கள் உள்ளனர். பாஸ்வேர்ட் காலம் முடிவடைந்து விட்டது. எனவே புது பாஸ்வேர்ட்டைப் பயன்படுத்துங்கள் எனப் பலருக்கு விண்டோஸ் எக்ஸ்பி எச்சரிக்கை செய்தி கொடுத்துக் கொண்டிருக்கிறது. பாஸ்வேர்ட்டை அவ்வப்போது மாற்றிக் கொண்டிருக்க கஷ்டமாக உள்ளது. என்ன செய்யலாம்? வழி ஏதும் உள்ளதா?*

**பதில் :-** வழியுண்டு. Password never expires என்ற செட்டிங்கை நீங்கள் கொடுக்க வேண்டும்.

Start பட்டனை கிளிக் செய்து my computer என்பதை ரைட் கிளிக் செய்யுங்கள். manage என்ற கட்டளையைக் கிளிக் செய்யுங்கள். computer management என்ற டயலொக் பொக்ஸின் இடப்புறம் தெரிகிற local users and groups என்பதை ஒட்டிய பிளஸ் அடையாளத்தை கிளிக் செய்யுங்கள். பின்பு users என்ற போல்டரை கிளிக் செய்யுங்கள். வலது பக்கம் தெரிகிற யூசர் பெயரை டபுள் கிளிக் செய்யுங்கள். கிடைக்கின்ற properties டயலொக் பொக்ஸில் Password never expires என்ற செக் பொக்ஸை தேர்வு செய்துவிட்டு OK சொல்லுங்கள்.

***கேள்வி :-*** ***Marquee Tag*** *பற்றிய விபரத்தைக் கூறவும்?*

**பதில் :-** இடமும், வலமுமாக ரெக்ஸ்டை மெதுவாக ஓட வைப்பதற்கு **Marquee Tag** பயன்படுகின்றது. ஓட வேண்டிய ரெக்ஸ்ட்டை <Marquee> or </Marquee> ஆகியவற்றிற்கிடையே குறிப்பிட வேண்டும். BEHAVIOR, DIRECTION, LOOP, SCROLLAMOUNT, SCROLLDELAY, BGCOLOR, HEIGHT, WIDTH, HSPACE, VSPACE மற்றும் ALIGNB ஆகிய அட்ரிபியூட்டுகள் இதற்கு உள்ளன. இவற்றை விவரிக்க இங்கு இடம் பற்றாது.

***கேள்வி :-*** ***Windows 98*** *கம்ப்யூட்டரில் நேரம் மட்டும் தெரிகிறது. மவுஸை அந்த நேரம் மேல் கொண்டு போனால் தேதி தெரிகிறது. தேதியும் நிரந்தரமாகத் தெரிய என்ன செய்யலாம்?*

**பதில் :-** வின்டோஸ் எக்ஸ்பியில், ராஸ்க் பாரின் உயரத்தை இரு வரிகளுக்கு உயர்த்தினால் தேதியும், நேரமும் தெரியும். ஆனால் உங்களிடம் இருப்பதோ வின்டோஸ் 98. நீங்கள் T Clock EX என்ற புரோக்கிராமைப் பயன்படுத்தலாம். Tray Date என்ற புரோக்கிராமும் உதவும்.

***கேள்வி :-*** *திறந்துள்ள எல்லா வின்டோக்களையும் சிறிதாக்கி விட்டு, டெஸ்க்ரொப்பை தெரிய வைக்க ஷோர்ட்கட் கீ உள்ளதா?*

**பதில் :-** வின்டோஸ் லோகோ பொறித்த கீ உங்களது கீ போர்ட்டில் உள்ளதல்லவா? அதையும் D கீயையும் சேர்த்து அழுத்துங்கள்.

***கேள்வி :-*** *பல வெப்தளங்களில் **Form** களைக் காட்டி நிரப்பச் சொல்லுகிறார்கள். பெயர், வயது, முகவரி போன்ற இந்த விபரங்களை ரைப் அடிப்பதற்குள் பொறுமை போய் விடுகிறது. இவற்றைக் கொடுக்காமல் அந்தத் தளங்களைப் பார்வையிட முடியுமா?*

**பதில் :-** Form ஐ நிரப்பாமல் அந்தத் தளத்தில் நுழைய முடியாது. Form இனுள் ரைப் செய்ய வருத்தமாக இருந்தால், அப்படி நிரப்புவதற்காகவே உள்ள சொப்ட்வெயார் எதையாவது பயன் படுத்தலாம். Al Robo Form அப்படிப்பட்ட சொப்ட்வெயாரில் ஒன்று உங்களைப் பற்றிய விபரங்களை இந்த சொப்ட்வெயாரிடம் ஒரு தடவை கொடுத்தால் போதும்.

வெப்தளத்தின் Form தோன்றியவுடன் அதை ரைட் கிளிக் செய்யுங்கள். Al Robo Form சொப்ட்வெயாரே அந்த Form ஐ நிரப்பும். இந்த சொப்ட்வெயார் இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கேள்வி :-*** *எக்செலில் Subtotals கண்டுபிடித்தேன். இதன் Summary மட்டும் எனக்கு போதுமாதலால் அதை மட்டும் கொப்பி செய்து வேறொரு இடத்தில் பேஸ்ட் செய்தேன். ஆனால் மறைந்துள்ள வரிசைகளும் சேர்ந்து பேஸ்ட் ஆகிறது. வெறும் சமரியை மட்டும் கொப்பி-பேஸ்ட் செய்ய முடியாதா?*

**பதில் :-** மறைந்துள்ள வரிசைகளை விட்டு விட்டு, கண்களுக்கு தெரிகின்ற செல்களை மட்டும் தேர்வு செய்யும்படி எக்செலுக்கு கூறினால் சரியாகிவிடும். டேற்றா உள்ள பகுதியில் உள்ள ஏதாவது செல்லை கிளிக் செய்யுங்கள். பின்பு Ctrl+(asterisk) கீகளை அழுத்துங்கள். இப்பொழுது எல்லா செல்களும் தேர்வாகி விடும்.

கண்களுக்குத் தெரிகின்ற செல்களைத் தேர்வு செய்ய Alt + ; (semicolon) கீகளை அழுத்துங்கள் அல்லது F5 கீயை அழுத்திவிட்டு, Special என்பதை கிளிக் செய்து பின்பு Visible cells Only என்பதை கிளிக் செய்து ஓ.கே செய்யுங்கள். இனிமேல் கொப்பி அன்ட் பேஸ்ற் செய்து பாருங்கள்.

***கேள்வி :-*** *இன்ரர்நெற் மூலம் பொருட்கள் வாங்கும் போது நாம் ரைப் செய்யும் கிறடிற் கார்ட் எண்ணைக் கைப்பற்றி மற்றவர்கள் சாமான்கள் வாங்கி விட முடியும் என எனது நண்பன் கூறுகிறான். உண்மையா?*

**பதில் :-** உண்மை தான். Keyloggers எனப்படுகின்ற Spyware புரோக்கிராமில் ஒன்றை உங்களுக்குத் தெரியாமல் உங்கள் கம்ப்யூட்டரில் நிறுவி விட்டால் போதும். இன்ரர்நெற்றில் நுழைந்து பின்பு நீங்கள் ரைப் செய்கின்ற எல்லா விபரங்களும் அந்தப் புரோக்கிராமைத் தயாரித்தவருக்குத் தானாக அனுப்பப்படும்.

Anti-Key logger பிரிவைச் சேர்ந்த புரோக்கிராம் ஒன்றை உங்கள் கம்ப்யூட்டரில் நிறுவினால் நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. Advanced Anti Key logger என்பது இந்த பிரிவைச் சேர்ந்த புரோக்கிராமில் ஒன்று. server ஆன இதை உங்கள் கம்ப்யூட்டரில் நிறுவுங்கள்.

***கேள்வி :-*** *தாங்கள் ஒரு கட்டுரையில் குறிப்பிட்ட தமிழ் குறள் சொப்ட்வெயார் தொகுப்பை டவுண்லோட் செய்து இறக்கிப் பயன்படுத்தினேன். ஆனால் சில நாட்களாக பதிவு காலியாகி விட்டது. இது பதியாத ஒன்று என்று செய்தி வருகிறது. இலவசம் என்று சொல்லி விட்டு ஏன் பதியச் சொல்கிறார்கள்? எப்படிப் பதிவது?*


**பதில் :-** குறள் தமிழ்ச் செயலி இலவசம் தான். எத்தனை பேர் பயன்படுத்துகின்றனர் என்று கணக்கெடுக்க இது கோல இலவசமாகவே பதிவு செய்திடச் சொல்வார்கள். இந்த சொப்ட்வெயார் தொகுப்பைப் பொறுத்தவரை நீங்கள் மீண்டும் இறக்கிப் பதிந்து பயன்படுத்தலாம். 90 நாட்களுக்கு இயங்கும். அதற்குப்பதிலாக http://www.kstarsoft.com/> என்ற அந்தத் தளத்தில் கொடுத்துள்ள இமெயில் முகவரிக்கு தங்கள் பெயரைக் குறிப்பிட்டு அனுப்பினால் உடன் ஓர் எண் அனுப்புவார்கள். குறள் பதிப்பின் மூலம் பதிந்து கொள்ளலாம்.

***கேள்வி :-*** *ஒரு தசம எண்ணைக் கொடுத்தால் அதை முழு எண்ணாக ஆனால் அது இரட்டைப்பட எண்ணாக வரும்படி செய்ய எக்செலில் வழியுண்டா? விடையின் மதிப்பு எண்ணின் மதிப்பை விடக் கூடுதலாக இருக்க வேண்டும்.*

**பதில் :-** எக்செல் தொகுப்பில் உள்ள Even Functional நீங்கள் பயன்படுத்தலாம். எடுத்துக் காட்டாக A1 செல்லில் *12.34* என்ற மதிப்பு இருப்பதாக வைத்துக் கொள்வோம். B1 செல்லில் =EVEN(A1) என்ற Formula வைக் கொடுத்தால் விடை *14* என நீங்கள் கேட்டபடி முழு எண்ணாக அந்த மதிப்பை விட அதிகமாக, அடுத்த இரட்டைப்படை எண்ணாக எக்செல் வெளிப்படுத்தும். =ODD(A1) என்ற Formula வை ஏதாவது செல்லில் கொடுத்தால் *13* என விடை கிடைக்கும்.

***கேள்வி :-*** *எனது கம்ப்யூட்டரில் விண்டோஸையும் லினக்ஸையும் நிறுவி இருந்தார்கள். நான் லினக்ஸ் வேண்டாம் என்று அதை அழித்து விட்டேன். அப்படி இருந்தும் பூட் செய்யும் பொழுது ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தை தேர்வு செய்வதற்கான மெனு கிடைக்கின்றது. அதை எப்படி நீக்குவது?*

**பதில் :-** நீங்கள் லினக்ஸை முறையாக நீக்கவில்லை என்று தெரிகிறது. dos prompt இல் இருந்து கொண்டு Fdisk/mbr என்ற கட்டளையைக் கொடுத்துப் பாருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்ப்யூட்டருக்கான பாதுகாப்பு அரண

விண்டோஸ் என்டி, விண்டோஸ் எக்ஸ்பி தருகிற பாதுகாப்பு, விண்டோஸ் 98 இல் கிடையாது. அவை



தருகின்ற பாதுகாப்பு கவசத்தை விண்டோஸ் 98 இல் நம்மால் கொடுக்க முடியாவிட்டாலும் ஓரளவு பாதுகாப்பை ஏற்படுத்த முடியும். உங்களைத் தவிர வேறு யாரும் விண்டோஸ் 98 கம்ப்யூட்டரில் நுழைய முடியாதவாறு செய்தாலே ஓரளவு பாதுகாப்பு கிடைத்து விடும் அல்லவா?

ஸ்கிரீன் சேவர் ஒன்றுக்குப் பாஸ்வேர்ட்டைக் கொடுத்து, கம்ப்யூட்டர் Boot ஆகும் போதெல்லாம் அதை இயங்கும்படி செய்து விட வேண்டும். பாஸ்வேர்ட் தெரியாத எவரும், ஸ்கிரீன் சேவரை நிறுத்த முடியாததால் கம்ப்யூட்டரில் நுழைய முடியாது. ஸ்கிரீன் சேவர் வழங்குகின்ற பாதுகாப்பு அரணை எப்படி உருவாக்குவது என்பதைப் பார்ப்போம்.

## ஸ்கிறீன் சேவருக்கு பாஸ்வேர்ட்டை வழங்க

டெஸ்க்ரொப்பின் வெற்றிடத்தில் ரைட்-கிளிக் செய்து Properties கட்டளையைத் தேர்வு செய்யுங்கள். கிடைக்கிற டயலொக் பொக்ஸில் Screen Saver டேபை கிளிக் செய்யுங்கள். உங்களுக்குப் பிடித்தமான ஸ்கிறீன் சேர்வரைத் தெரிவு செய்யுங்கள். எடுத்துக்காட்டாக 3D Flying Objects என்ற ஸ்கிறீன் சேவரைத் தேர்வு செய்துள்ளதாக வைத்துக்கொள்வோம்.

Password Protected என்ற செக் பொக்ஸை கிளிக் செய்து ரிக் அடையாளத்தைக் கொண்டு வாருங்கள். பின்பு Change பட்டினை அழுத்துங்கள். கிடைக்கின்ற டயலொக் பொக்ஸில் உங்கள் பாஸ்வேர்ட்டை ரைப் செய்யுங்கள். கம்ப்யூட்டர் பாதுகாப்பு அரணின் அடித்தளம் உங்கள் பாஸ்வேர்ட்டைப் பொறுத்து இருப்பதால் நல்ல பாஸ்வேர்ட்டை எவராலும் யூகிக்க முடியாதபடி ரைப் செய்யுங்கள். பாஸ்வேர்ட்டின் நீளம் அதிகமாக இருப்பது நல்லது. அதே பாஸ்வேர்ட்டை மீண்டும் ரைப் செய்யுங்கள். OK பட்டினை அழுத்தி பாஸ்வேர்ட் டயலொக் பொக்ஸை மூடுங்கள்.

The password has been successfully changed என்ற செய்தி கிடைக்கும். OK பட்டினை அழுத்தி அதை மூடுங்கள். மீண்டும் ஒரு முறை OK பட்டினை கிளிக் செய்து Properties டயலொக் பொக்ஸை மூடுங்கள்.

## ஸ்கிறீன் சேவர் ஷோர்ட்கட்டை டெஸ்க்ரொப்பில் கொண்டுவர

தொடர்ந்து பல நிமிடங்கள் நீங்கள் கம்ப்யூட்டரில் பணி எதுவும் செய்யாவிட்டால் தான், உங்களால் பாஸ்வேர்ட் கொடுக்கப்பட்ட ஸ்கிரீன் சேவர் துடித்து எழும். நினைத்த போதெல்லாம் அதைச் செயல்படுத்த வேண்டுமெனில் அந்த ஸ்கிறீன் சேவருக்கான ஷோர்ட்கட்டை டெஸ்க்ரொப்பில் போட்டு அதை இயக்கலாம். விரும்பினரல் இதற்கு கீகளையும் வழங்கலாம்.

ஸ்கிறீன் சேவருக்கான ஷோர்ட்கட்டை வழங்க டெஸ்க்ரொப்பின் வெற்றிடத்தில் ரைட்கிளிக் செய்து கிடைக்கின்ற மெனுவில் New Shortcut என்பதை கிளிக் செய்யுங்கள். Create Shortcut என்ற டயலொக் பொக்ஸ் கிடைக்கும். அதன் Browse பட்டினை அழுத்தி நமது ஸ்கிறீன் சேவர் உள்ள C:windows/system டிரெக்ரிக்குச் செல்லுங்கள். File of type என்ற டிராப்-டவுண் லிஸ்ட் பொக்ஸில் இருந்து All Files என்பதைத் தேர்வு செய்யுங்கள். 3D flying objects என்ற நமது ஸ்கிறீன் சேவரின் பெயரை டபுள்-கிளிக் செய்த, பின்பு Next பட்டினை அழுத்துங்கள். ஏதாவது சிறிய பெயரை (எடு:3dfo) ரைப் செய்து Finish பட்டினை அழுத்துங்கள்.

டெஸ்க்ரொப்பில் ஸ்கிறீன் சேவருக்கான ஷோர்ட்கட் வந்து விட்டது. கம்ப்யூட்டர் ஒன் செய்யப்பட்ட நிலையில் வெளியில் எங்கேயாவது செல்ல வேண்டி வந்தால், அந்த ஷோர்ட்கட்டை டபுள்-கிளிக் செய்து விட்டுப் போங்கள். நீங்கள் இல்லாததைப் பார்த்த எவராவது கம்ப்யூட்டரில் வேலை செய்யலாம் என நினைத்து மவுஸை அல்லது கீ போர்ட்டை தொட்டவுடன் பாஸ்வேர்ட்டை ரைப் செய்யுமாறு அந்த ஸ்கிறீன் சேவர் கிடைக்கும். அவருக்கு அது தெரியாததால் கம்ப்யூட்டரில் அவரால் நுழைய முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.பி.ஆர்.எஸ் ... !!
# [GPRS]

**T.M.RUBAN** (MCP)
-LECTURER-
(Jana computer Technologists)



தொலைபேசி இணைப்பு தேவையில்லை, மோடமும் தேவையில்லை. இணைய இணைப்பிற்கு செல்பேசி போதும். அதுதான் ஜி.பி.ஆர்.எஸ்

***ஜி.பி.ஆர்.எஸ் (GPRS) என்றால்...***

செல்பேசி சேவைகள் இரு தொழில் நுட்பங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. ஒன்று ஜி.எஸ்.எம் (GSM), மற்றையது சி.டி.எம்.ஏ (CDMA) ஆகும். இதில் GSM (ஏர் டெல், "ட்ச்,ஆர்.பி.ஜி, ஏர்செல்) போன்றவை இந்த தரமுறையின் அடிப்படையில் செயல்படுகின்றன. CDMA (டாட்டா, ரிலையன்ஸ், இன்டிகாம்) போன்றன இத் தொழில் நுட்பத்தை பயன்படுத்துகின்றன.

இன்று தகவல் தொடர்புத் துறையில் 3ஜி (3G) என்பது குறித்து பெருமளவிற்குப் பேசப்படுகின்றது. இது மூன்றாம் தலைமுறை என்பதை சுருக்கமாகக் குறிக்கின்றது.

தொலைபேசி நெட்வேர்க்குக்கு அனலொக் (Analog) முறையில் நடைபெற்ற பேச்சுப் பரிமாற்றம் முதலாம் தலைமுறை அல்லது 1ஜி எனவும், கணிப் பொறி நெட்வேர்க்குகள், இணையம் வாயிலாக நடைபெறும் டிஜிற்றல் (Digital) முறையிலான ஓடியோ / வீடியோ (Audio / Video) பரிமாற்றங்கள் 2 ம் தலைமுறை (2G) எனவும் அழைக்கப்படும். இவ் வகையில் 3 ம் தலைமுறை (3G) என்பது "வயர்லெஸ் நெட் வேர்க்" தொழில்நுட்பத்தைக் குறிப்பதாகும்.

இரண்டாம் தலைமுறை தகவல் தொடர்பு என்பதே GSM,CDMA,TDMA ஆகிய வயர்லெஸ் தொழில்நுட்பங்களையும் உள்ளடக்கியதாகும். இவற்றில் TDMA (Time – Division – Multiple Access) என்பது ஏற்கனவே இருக்கும் 1G "அனலொக் நெட் வேர்க்குகள்" மீதே அமைக்கப்பட்டது. GSM என்பது முற்றிலும் புதிய அணுகுமுறையைக் கொண்டது. CDMA என்பது வயர்லெஸ் தகவல்தொடர்பில் உயர்வேக தகவல் பரிமாற்றம் வழங்கும் தொழில்நுட்பம்.

2ம் தலைமுறை தொழில் நுட்பங்களின் மேம்பட்ட வடிவங்களை 2.5G என அழைக்கின்றனர். இவை 2 ம் தலைமுறைக்கும், 3ம் தலைமுறைக்கும் இடையே பாலமாக விளங்குவது ஜி.பி.ஆர்.எஸ் அல்லது ஜென்ரல் பொக்கற் ரேடியோ சேர்விஸ் என்பது இந்த இடை நிலையைச் சேர்ந்த "வயலெஸ்" தகவல் தொடர்பு தரமுறை. இது GSM மொபைல் நெட்வேர்க்குகளில் பயன்படுத்தப்படும் உலகளாவிய தரமுறையும் கூட.

***செல்பேசியே மோடமாக...***

இன்றைக்கு சந்தையில் கிடைக்கும் செல்பேசிக் கருவிகளில் (Handset) பெரும்பாலானவை GPRS ஏற்புள்ளவை. இவற்றை சாதனங்கள் என்றே சொல்லலாம் இதனால் இத்தகைய செல்பேசிகளிலேயே இணையச் சேவைகள் சிலவற்றை அணுக முடியும் என்பதுடன், இவற்றை வயர்லெஸ் மொடமாகப் பயன்படுத்தி கணிப் பொறிகளில் இணைய இணைப்பும் பெறலாம்.

இணைய சேவை வழங்குவோரை IPS என்று அழைப்பர். இவர்கள் தொலைபேசித் தடங்களைப் பயன்படுத்தி இணையச் சேவை வழங்கி வருகின்றனர். இந்த ஐ.எஸ்.பி (ISP) சேவையை பயன்படுத்த MODEM என்ற துணைக்கருவியை கணிப்பொறியுடன் இணைக்க வேண்டும். இது "டயல் அப்" முறையில் தொலைபேசித் தடங்கள் வழியாகத் தொடர்பு கொண்டு இணையத்துடன் இணைக்கும்.

தற்போது பல்வேறு நெற்வேர்க் ஒப்பரேட்டர்கள் GPRS தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மொபைல் நெட்வேர்க்குகளில் இணைய சேவைகளை வழங்கத் தொடங்கியுள்ளனர். இவர்களை WISP (Wireless Internet Service Providers) என்றழைக்கின்றனர். செல்பேசியை மொடமாகப் பயன்படுத்துவற்கு GPRS Data Card என்ற துணை சாதனத்தை கணனியுடன் (பி.சி, லாப் - டாப்) இணைக்க வேண்டும். இது எவ்வித கேபிள் இணைப்புகளின் தேவையுமின்றி செல்பேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக இணையத்துடன் இணைப்புக் கொடுக்கின்றது. செல்பேசி வழியாக இணையத்துடன் இணைப்புக் கொடுக்கின்றது. இதனைப் பயன்படுத்திக் கொள்ள ஆகும் செலவு மிகக் குறைவு.

***சில சிறப்பியல்புகள்......***

GPRS வழக்கமான தொலைபேசித் தடங்களில் பயன்படுத்தப்படும் Circuit – Switched என்ற முறைக்கு மாற்றாக "பொக்கற்" (Pocket) அடிப்படையிலான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது. "பொக்கற்" என்பது ஒரு "தகவல் அலகு" (Data Unit). அதாவது தகவல் கோப்பில் ஒரு பகுதி இது வயர்லெஸ் நெட்வேர்க்குகள் வழியாகப் பரிமாறிக் கொள்வதற்கு உகந்த வடிவம்.

Circuit Switch முறையில் ஒரு தடம் அல்லது அலைவரிசை, ஒரு அழைப்பின் போது கால அளவிற்கு பயன்படுத்தப்படுகின்றது. GPRS முறையில் பரிமாற்றம் நிகழும் முழுக்கால அளவிற்கும் இணைப்பை பராமரிக்க வேண்டியது இல்லை. தகவல் அனுப்பும் போது அல்லது பெறும் போதும் மட்டும் "ரேடியோ" இணைப்புக் கொடுத்தால் போதும் தகவல்களை அனுப்பி விட்ட பின்னர் அல்லது பெற்று விட்ட பின்னர் அலைவரிசை சுதந்திரமாகி விடுகின்றது. எனவே ஒன்றிற்கு மேற்பட்ட பயனாளர்கள் ஒரே ரேடியோ அலைவரிசையை திறம்பட பகிர்ந்து கொள்ளலாம். "சர்க்யூட் சுவிட்ச்டு" இணைப்புகளில், பயனாளர்கள் தகவல்களை அனுப்பினாலும் சரி அனுப்பாவிட்டாலும் சரி, அழைப்பின் போது நேரத்தை வீணாக்குவதோடு அழைப்பிற்கான கட்டணம் போகக் கூடுதலாக "அழைப்பு ஏற்பட்டு நேரத்திற்கும் (Call setup time) கட்டணம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு அழைப்பிற்கும் 10 முதல் 15 விநாடிகள் எடுக்கும். ஆனால் பொக்கற் முறையில் "அழைப்பு ஏற்பட்டு நேரம்" சுழியாகும். மேலும் இம்முறையில் உண்மையில் தொடர்பு கொள்ளும் நேரத்திற்கு மட்டும் கட்டணம் செலுத்துகின்றனர். இவற்றால் மிக சிறப்பு கூறினால் மிகவும் மலிவான அதே நேரத்தில் வசதியான வழிமுறையை வழங்குறது . GPRS .

GPRS : இணையத்தொடர்பிற்கான "நெறிமுறை" களுடன் (Protocol) ஒத்திசைந்து இயங்கும். எனவே Internet Browsing, ETP, Chart, Telnet, E mail போன்ற அனைத்து இணைய சேவைகளையும் "மொபைல் நெட்வேர்க்" வழி கடத்தும் திறன் கொண்டது.

***3G MOBILE PHONE.......***

சிலையன்ஸ் நிறுவனம் "ஆர்-கனெக்ட்" (R-Connect) என்ற சேவையை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன் மூலம் ரிலையன்ஸ் நிறுவனம் வழங்கும் ஜாவா வசதியுள்ள 3G CDMA செல்பேசிகள் (LG, Sumsung) Modem ஆகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இச்சேவையைப் பெற R-Connect Kit ஐ வாங்கி கணிப்பொறியில் (PC, Laptop) நிறுவ வேண்டும். இதனுடன் Datacable, Installation CD என்பனவும் வழங்கப்படும்.

இணைய உலாவில் இருக்கும்போது தகவல பரிமாற்றம் ஏதும் நடைபெறவில்லை. எனில், உங்களுக்கு வரும அழைப்புக்களைப் பேசலாம். தகவல் பரிமாற்றம் நிகழும் போது அழைப்புகளை அனுப்பவோ! பெறவோ முடியாது. செல்பேசியை மோடமாகப் பயன்படுத்தும் முறை, Wireless தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் வாயிலாக Dial-Up இணைப்பு முறையில் ஏற்பட்டுள்ள பரிணாம வளர்ச்சி. இது இணையத்தை அணுகும் முறைக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்துள்ளது.

தொழில்/அலுவல் காரணமாக பல்வேறு இடங்களுக்கு செல்பவர்களும், மடிக்கணனி போன்ற கையோடு எடுத்துச் செல்லும் சாதனங்களை பயன்படுத்துவோரும் நினைத்த நேரத்தில் எங்கிருந்த படியும், இணையத்தை தொடர்புகொள்ள இம்முறை உதவுகிறது. அதுவும் செல்பேசிகளின் பயன்பாடு அதிகரித்து வரும் இன்றைய யுகத்தில் இதுவும் ஒரு நல்ல வரப்பிரசாதமே....

***

## Excel Worksheet இல் நாளும் நேரமும்

எக்செல் வேர்க்ஷீட்டில் செயல்படுகையில் ஏதேனும் ஒரு செல்லில் நேரம் மற்றும் நாளினைக் குறிப்பிட விரும்புவோம். இதற்குத் தனியாக அதனை ரைப் செய்ய வேண்டியதில்லை. அன்றைய தேதியை செல்லில் அமைத்திட Ctrl + ; (செமிகோலன்) அழுத்தினால் போதும். அப்போதைய கம்ப்யூட்டர் நேரத்தை செல்லில் அமைத்திட Ctrl + Shift + : (கோலன்) அழுத்தவும். இவ்வாறு நேரத்தையும் நாளினையும் அமைத்தால் அவை அப்படியே இருக்கும். பைலை மீண்டும் அமைத்திடும் நாளுக்கு மாறாது. அப்படியானால் பைலைத் திறக்கும் நாள் மற்றும் நேரத்திற்கு அவை மாற வேண்டும் என்றால் என்ன செய்திட வேண்டும் என நீங்கள் எண்ணலாம். = today( ) (வலது இடது பிரக்கற் குறிகள்) என்ற கட்டளையை அல்லது formula வை அமைக்கவும். பைலைத் திறக்கும் போது உள்ள தேதி கிடைக்கும். = now ( ) என்ற formula வை அமைத்தால் அன்றைய தேதியும் அப்போதைய நேரமும் பதியப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# e-commerce

தொடர் 21

## உங்கள் திறன் உங்களுக்குத் தெரியுமா?

இன்ரர்நெற் இந்த நொடியில் ஒரு தகவலைச் சொன்னால் அடுத்த நொடியில் அலாஸ்கா விலிருந்து அதற்கு விபரம் கேட்டு மின்னஞ்சல் வரும். நீங்கள் புதுமையான மூலிகைக் குங்குமம் தயாரிக்கிறீர்கள். அதைப்பற்றி இணையத் தளத்தில் விளம்பரம் செய்தீர்கள். மிகவும் தரமான பொருள் கண்ணைக் கவரும் நிறங்கள், வகைகள்.


எல்லாம் சரி, எனக்கு ஒன்றரை தொன் அனுப்பி வைக்கவும் என்று ஒருவர் சிங்கப்பூரிலிருந்து கோரிக்கை வைக்கிறார். உங்களால் அனுப்பி வைக்க முடியுமா? குங்குமமா?... ஒன்றரை தொன்னா... என்னுடைய மொத்தத் தயாரிப்பே முந்நூறு கிலோதானே என்றீர்களேயானால் இணையத்தளம் தேவையா... ஈகொமர்ஸிற்கு இந்தப் பொருள் ஏற்றதுதானா என்பதை ஒருமுறைக்குப் பல முறைக்குப் பல முறை சிந்தியுங்கள்.

இதையே வேறு விதமாகவும் எடுத்துக் கொள்ளலாம். ஐம்பது கிராம் குங்குமத்தை அட்லாண்டாவுக்கு அனுப்பி வையுங்கள் என்று கேட்டால் செலவு எவ்வளவு ஆவது?

பான் பீடா விற்பவர்கள்கூட ஈகொமர்ஸில் இறங்குகிறார்கள். இது நல்ல முயற்சிதான். ஆனால் உங்களால் பத்து ரூபாய் பெறுமானமுள்ள பான் பீடாவை இருபது ரூபாய் செலவழித்து நுகர்வோரிடம் கொண்டுபோய்ச் சேர்க்க முடியுமா? பான் பீடாவை பத்து நாட்களுக்கு முன்பாகவே வாங்கி வைத்துக் கொள்வோம் என்று யாரும் வாங்க மாட்டார்கள். இன்றைக்கு மதியம் ஒரு விபத்து என்றால் காலையில் தகவல் கொடுத்தாலே அதிகம்.

ஆக்ராவில் பான்பீடா தயாரித்துக் கொண்டிருப்பார்கள். அமெரிக்காவில் இருந்து தேவை என்று கேட்பார்கள். உங்களுக்கு அமெரிக்காவிலும் இதைத் தயாரித்து தருவதற்கு ஏற்பாடு செய்ய முடிந்தால் வெற்றிகரமாகச் செய்யலாம். அப்படி இல்லாதபோது நானும் ஈகொமர்ஸில் குதிக்கிறேன் என்று இறங்குவது புத்திசாலித்தனமானது.

சிறிய தொழில் தான் என்றாலும் உங்களால் தயாரித்து விநியோகம் செய்ய முடியும் என்கிற திறமை, கட்டமைப்பு, பிற வசதிகள் இருக்குமானால் ஈகொமர்ஸ் உங்கள் வணிகத்தை வளர்ப்பதற்குக் கை கொடுக்கும். திருநரையூரில் இருந்து கொண்டு கைவினைப் பொருட்களைச் செய்கிறீர்கள். சின்னப் பொருள்தான். அவசரமாக யாரும் கேட்க மாட்டார்கள். அதிக எண்ணிக்கையில் செய்து வைத்தாலும் ஒன்றும் கெட்டுப் போகாது.



எங்கிருந்து யார் கேட்டாலும் ஓரளவு குறைந்த செலவிலேயே அனுப்பி வைத்துவிடலாம். எனவே இந்தத் தொழிலுக்கு ஈகொமர்ஸ் ஏற்றது. இன்ரர்நெற்றில் உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பைப் பற்றி விளம்பரம் செய்யலாம். காட்சிப்படுத்தலாம். விற்கலாம். பல இன்ரநெற் வணிக நிறுவனங்களைச் சிறு குழந்தைகள் கூட்டாஞ்சோறு ஆக்குவது போல் தொடங்கிவிடுகிறார்கள். அப்புறம் செயல்படுத்த முடியாமல் விழி பிதுங்கிப்போகிறார்கள்.

இப்படித்தான் கல்லூரி மாணவ, மாணவிகள் சிலர் சேர்ந்து காதலர் தினத்தன்றைக்கு மும்பையில் யாருக்கு வேண்டுமானாலும் மலர் கொத்துகளை அளிக்கின்றோம் என்று ஆரம்பித்தார்கள். அவர்களே நினைத்துப்பார்த்திராத அளவுக்கு ஆணைகள் வந்து குவிந்துவிட்டன. கடைசியில் அவர்களே பல இடங்களுக்குச் சென்று கொடுத்துவிட்டு வர வேண்டியதாகி விட்டது. இத்துடன், சம்பந்தமே இல்லாதவர்கள் எல்லாம் பெண்களுக்கு அனுப்பிய மலர்க்கொத்துகளை கொடுக்கப் போனது வேறு ஒரு பிரச்சனையாகிவிட்டது.

## வணிகம் தெரியுமா?

வணிகத்தில் ஓரளவு அனுபவம் இல்லாமல் இறங்குவது தொல்லை தரக்கூடியது. சாதாரண வணிகத்திற்கே இப்படி என்றால் மின் வணிகத்திற்கு இன்னும் கவனமாக இருக்க வேண்டும். ஏற்கனவே வணிகம் செய்தாலும் இந்தத் துறையில் புதிதாக என்ன செய்ய முடியும் என்கிற சிந்தனை அவசியம். புதுமைக்குத் தான் இங்கு வரவேற்பு அதிகம்.

பழைய முறையிலேயே நடத்துவதனால் ஒரு சிறு குச்சியைத் தூக்குவதற்கு யானையை வேலை வாங்குகிற மாதிரி ஆகிவிடும். இன்ரர்நெற்றும் ஈகொமர்ஸும் அளவு க்டந்த பலம் பொருந்தியவை. இவற்றைத் தக்கபடி கையாள்வதற்கு அடிப்படையில் வணிகம் பற்றி அனுபவம் இருக்க வேண்டும்.

## திட்டமிடுவது அவசியம்

திட்டமிடுவது இந்தத் தொழிலுக்கு அவசியம். திட்டம் சரிவர இல்லை என்றால் இடையில் நிறுத்த வேண்டி வரும். நிதி, சேவை, நிர்வாகம், தொழில்நுட்பம் மாறி வரும் சூழ்நிலைகள் என அனைத்துக் கூறுகளையும் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

மின் வணிகத்தைப் பொறுத்தவரை ஈடுபடுத்தப்படும் முதலீட்டிற்கு இரண்டு மடங்கு வருவாய் திரட்டக்கூடிய விதத்தில் திட்டமிட்டால்தான் செயல்படுத்தும் போது கட்டுப்படியாகக் கூடிய அளவிற்காவது நடத்த முடியும் என்கிறார்கள்.

## புத்தகம் மட்டும் போதாது

அமேசன் டொட்கொம் ஆரம்பிக்கப்பட்ட புதிதில் புத்தகங்களை மட்டுமே விற்பதைத் தொழிலாகக் கொண்டிருந்தது. நம்முடைய நாட்டில் புத்தகங்களை மட்டுமே விற்றுக்கொண்டிருக்க முடியாது. புத்தகங்களை மட்டும் விற்பதில் பெரிய இலாபமும் இருக்க வழி இல்லை. பிற வழிகளில் வருவாய் ஈட்டக் கூடிய வாய்ப்பும் இதில் இல்லாமல் போய்விடும்.


புத்தகங்களுக்கு அடுத்தபடியாகக் கொம்பாக்ட் டிஸ்க் எனப்படும் குறுவட்டுக்களை விற்கலாம் என்பது வழக்கமான யோசனைதான். நூறு கோடி மக்கள் வாழும் நாட்டில் யாரும் தினமும் குறுவட்டு வாங்கிக் கொண்டிருக்கப் போவதில்லை. வெளிநாட்டுச் சந்தையைப் பிடிக்க இது சிறந்த வழியும் இல்லை.

இன்ரர்நெற் வணிகத்தின் வரவேற்கத்தக்க பண்பே இடைத்தரகர்களை ஒழிப்பது தான். புத்தகத்தை நேரடியாக விற்பதால் அதிகக் கழிவு தர வேண்டும். கட்டுப்படியாகுமா என்பதைக் கணக்குப் போட வேண்டும்.

## செய்யக்கூடாதது

இணையத் தளம் என்பது நொடிக்கு நொடி ஏற்படும் மாறுதல்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். செஞ்சிக்கோட்டையைப் பற்றி ஒரு இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்து அதில் வரலாற்றுத் தகவல்களை மட்டும் போட்டு வைத்து விட்டால் சுற்றுலாப் பயணிகள் வந்து மொய்த்துவிட மாட்டார்கள்.

என்றைக்கோ கட்டிய கோட்டை என்று பழைய தகவல்கள் மட்டும் வைத்துக்கொண்டிருந்தால் போதாது. இப்போதெல்லாம் அங்கு திரைப்படப்பிடிப்புக்களை நடத்துகிறார்கள். இந்தத் தகவல்களையும் தளத்தில் சேர்க்க வேண்டும். அதற்கு எங்கு அனுமதி வாங்கவேண்டும் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.



செஞ்சிக்குப் படம் எடுக்க வந்தால் தங்குவதற்கு வசதி இருக்கிறதா? சென்னையிலிருந்து தான் வரவேண்டுமா, அங்குள்ள வசதிகள் என்ன, வசதிக்குறைவுகள் என்ன என்று இது போன்ற தகவல்களை அடிக்கடி புதிது புதிதாகச் சேர்த்துக்கொண்டே இருக்கவேண்டும். போக்குவரத்து, வாகனங்கள், உணவு, தங்குமிடம் போன்றவற்றிற்கு இன்ரர்நெற் வழியாகவே முன்பதிவு செய்யக்கூடிய வசதி இருக்க வேண்டும்.


அடிக்கடி ஏற்படும் மாற்றங்களை உள்ளடக்காத எந்தத் தளமும் மறக்கப்பட்டு விடும். செய்ய வேண்டிய மாற்றங்களைச் செய்யாமல் விடுவது பெரிய தவறு.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத் தளத்தின் "IP" முகவரி



ஒரு கம்ப்யூட்டர் மற்றொரு கம்ப்யூட்டருடன் தொடர்பு கொண்டு தகவல் பரிமாற அந்தக் கம்ப்யூட்டரின் ஐபி முகவரி IP தெரிந்திருக்க வேண்டும். இந்த ஐபி முகவரியானது எண்களால் ஆனது. 32 bit கொண்ட ஐபி முகவரியை எட்டு எட்டு bits ஆகப் பிரிப்பர். ஒவ்வொரு 8 bits ஐயும் Actet என்பர். Actet இன் மதிப்பு 0 முதல் 255 வரைக்குள் ஒரு எண்ணாக இருக்கும்.

எடுத்துக் காட்டாகக் கூற வேண்டுமென்றால் 167.213.40.158 என்பது ஒரு ஐபி முகவரியாக இருக்கும். இதில் நான்கு பகுதிகள் உள்ளன. ஒரு பகுதியும் அடுத்த பகுதியும் முற்றுப் புள்ளியால் பிரிக்கப்பட்டிருக்கும். ஒரு பகுதி என்பது ஒரு Actet என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

## எண்ணா? பெயரா?

உங்கள் நண்பர்களுள் 23456789 என்ற தொலைபேசியை வைத்திருப்பது யார் என்று கேட்டால் சற்று நேரம் விழிப்பீர்கள். அதே நேரத்தில் உங்கள் நண்பர் ராமசாமியைத் தெரியுமா என்று கேட்டால் உடனே அவரை நினைவுக்கு கொண்டு வந்து விடுவீர்கள். காரணம், எண்களை நினைவில் வைப்பதை விடப் பெயரை நினைவில் வைப்பது எளிது. இது மனித இயல்பு.

இன்ரர்நெற் மூலமாக ஏராளமான கம்ப்யூட்டர்களை தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு உள்ளது. ஒவ்வொரு கம்ப்யூட்டரின் ஐபி முகவரியை நீங்கள் வைத்திருப்பது இயலாத காரியம். ஏனெனில் ஐபி முகவரி எண்களால் ஆனது.

ஒவ்வொரு கம்ப்யூட்டருக்கும் Domain Name என்ற பெயரால் ஆன முகவரியை கொடுக்கலாம் என கம்ப்யூட்டர் அறிஞர்கள் முடிவெடுத்தனர். எடுத்துக்காட்டாக www.yahoo.com என்பது ஒரு கம்ப்யூட்டரின் டொமைன் பெயர் ஆகும். இதை எளிதாக நீங்கள் நினைவில் வைக்க முடியும்.

இன்ரர்நெற்றில் இணைந்துள்ள ஒவ்வொரு கம்ப்யூட்டருக்கும் ஐபி முகவரி உண்டு. பெரும்பாலான கம்ப்யூட்டர்களுக்கு குறிப்பாக server களுக்கு டொமைன் பெயர்களும் உண்டு.

## Domain Name System

நீங்கள் ஒரு கம்ப்யூட்டருடன் தொடர்பு கொள்ள விரும்பினால் அதன் ஐபி முகவரியைப் பயன்படுத்தலாம்.

ஆனால் கம்ப்யூட்டர்களுக்கு தேவையானது ஐபி முகவரிகள் மட்டுமே. நமது வசதிக்காக நாம் டொமைன் பெயர்களைப் பயன்படுத்துகின்றோம். ஆனால் இந்த டொமைன் பெயருக்கான ஐபி முகவரி என்ன என்பதை முதலில் உங்கள் கம்ப்யூட்டர் கண்டு பிடித்து பின்பு அந்த ஐபி முகவரியைப் பயன்படுத்தித் தொடர்பு கொள்கின்றது.

நீங்கள் தொடர்பு கொள்ள விரும்புகின்ற கம்ப்யூட்டரின் ஐபி முகவரி 123.45.67.89 என வைத்துக் கொள்வோம். அந்த கம்ப்யூட்டருக்கான டொமைன் பெயர் www.abc.com எனவும் வைத்துக் கொள்வோம்.

இன்ரர்நெற்றில் நுழைந்த நீங்கள், உங்கள் கம்ப்யூட்டரின் ப்ரவுசர் சொப்ற்வெயாரைத் திறந்து அதன் முகவரிப் பகுதியில் 123.45.67.89 என ரைப் செய்த உடனேயே அந்தக் கம்ப்யூட்டரில் நுழைந்து விடுவீர்கள். காரணம், நீங்கள் ஐபி முகவரியைப் பயன்படுத்தியுள்ளீர்கள். கம்ப்யூட்டருக்கு ஐபி முகவரியைப் பயன்படுத்தத் தெரியும்.

ஐபி முகவரிக்குப் பதிலாக அந்தக் கம்ப்யூட்டரின் டொமைன் பெயரான www.abc.com என்பதை நீங்கள் உங்களது ப்ரவுசரில் ரைப் செய்திருப்பதாக வைத்துக் கொள்வோம். கம்ப்யூட்டருக்கு தேவை ஐபி முகவரி தான், டொமைன் பெயரல்ல. எனவே உங்கள் கம்ப்யூட்டர் நீங்கள் ரைப் செய்துள்ள www.abc.com என்ற டொமைன் பெயரைக் கொண்ட கம்ப்யூட்டரின் ஐபி முகவரியைக் கண்டுபிடிக்க முற்படும். இதற்காக இது Domain Name System (DNS) என்ற server ஐத் தொடர்பு கொள்ளும். அந்த டொமைன் பெயருக்கு உரித்தான ஐபி முகவரியை DNS server கண்டு பிடித்து உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்ப்யூட்டருக்கு வழங்கும். அந்த ஐபி முகவரியைப் பயன்படுத்தி உங்கள் கம்ப்யூட்டர் அந்த கம்ப்யூட்டருடன் தொடர்பு கொள்ளும்.

ப்ரவுசரில் நேரடியாக ஐபி முகவரியை ரைப் செய்தால், உடனடியாக உங்கள் கம்ப்யூட்டர் அந்தக் கம்ப்யூட்டரைத் தொடர்பு கொள்ளும். எனவே வேகமாக ப்ரவுசிங் செய்ய முடிகிறது. மாறாக நீங்கள் டொமைன் பெயரை ரைப் செய்தால், உங்கள் கம்ப்யூட்டர் உடனடியாக DNS server ஐத் தொடர்பு கொண்டு ஐபி முகவரியைக் கண்டு பிடிக்க வேண்டியிருக்கின்றது. இதனால் சற்று காலதாமதம் ஏற்படுகின்றது. ஏதோ காரணத்தினால் DNS server இயங்காமல் போனால் டொமைன் பெயரை வைத்துக்கொண்டு அந்தக் கம்ப்யூட்டரில் நுழைய முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எனவே டொமைன் பெயர்களை நினைவில் வைப்பதை விட ஐபி முகவரிகளை நினைவில் வைப்பது நன்மை பயக்கும் அல்லவா? எல்லாத் தளங்களின் ஐபி முகவரிகளை நினைவில் வைக்க முடியாவிட்டால் குறைந்த பட்சம் அடிக்கடி நுழைகின்ற தளங்களின் ஐபி முகவரிகளையாவது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

## Internet Softwares

நீங்கள் வாங்குகின்ற பி.டி.ஏக்களில் இன்ரர்நெற் வெப் தளங்களில் நுழையவும், இ-மெயில்களைப் பார்வையிடவும் வசதி இருக்க வேண்டும். எனவே பிரவுசர், ஈ-மெயில் கிளையன்ட் சொப்ட்வெயார் ஆகியவை இருப்பது நல்லது. இன்ரர்நெற்றில் நுழையும் பொழுது மொடம் பொருத்தப்பட்ட பி.டி.ஏ யை வாங்க வேண்டும். பல பி.டி.ஏ க்களின் உள்ளேயே மோடம் உண்டு. சில பி.டி.ஏக்களில் வெளியில் இருந்து மொடத்தை சேர்ப்பதற்கான வாயில் உள்ளது.

விலை ரூபா 5,000 முதல் 50,000 வரையிலான பி.டி.ஏக்கள் உள்ளன. பி.டி.ஏ யின் அளவு, நினைவகக் கொள்ளளவு, மொனிட்டர், பற்றரி போன்ற பலவற்றைப் பொறுத்து பி.டி.ஏ யின் விலை உள்ளது.

## MICROSOFT மலிவு விற்பனை

கட்டணம் ஏதுமின்றி இலவசமாகக் கிடைக்கும் லினக்ஸ் பயன்பாடு தொடர்ந்து மக்களிடையே அதிகரித்து வருவதால் மைக்ரோசொப்ட் தன் விண்டோஸ் தொகுப்பின் விலையைக் குறைத்துத் தர முன்வந்துள்ளது. குறிப்பாக ஆசிய நாடுகளில் இந்த விலை குறைவான தொகுப்பினை வரும் ஒக்ரோபர் முதல் அறிமுகப்படுத்த இருக்கின்றது. விண்டோஸ் எக்ஸ்பி ஸ்ராட்டர் எடிஷன் என்ற பெயருடன் இது தரப்படும் என்றும் முதன் முதலில் பெர்சனல் கம்ப்யூட்டர் பயன்படுத்துபவர்களுக்கு துணையாக இருக்கும் என்றும் மைக்ரோசொப்ட் அறிவித்துள்ளது. கம்ப்யூட்டர் ஒப்பரேட்டிங் சிஸ்டம் தொகுப்பு விற்கனைச் சந்தையில் தன் பங்கினைத் தக்க வைத்திட இந்த நடவடிக்கையினை மைக்ரோசொப்ட் மேற்கொண்டுள்ளது.

## கூக்ளிக்குச் சவால் விடும் மைக்ரோசொப்ட்

அதிகத் தேடும் திறன் கொண்ட இணைய தேடுதல் சாதனத்தை வழங்குவதில் கூக்ளியின் சாதனத்திற்குச் சவால் விடும் அளவிற்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் முன்வந்துள்ளது. இணையத் தளங்கள் மட்டுமன்றி இணையத்தில் இணைக்கப்பட்டுள்ள கம்ப்யூட்டர்களின் ஹார்ட் ட்ரைவ்களையும் தேடித் தகவல் தரும் வகையில் தேடுதல் சாதனம் ஒன்றை மைக்ரோசொப்ட் நிறுவனம் அமைத்து வழங்க முன்வந்துள்ளது.

தேடுதல் சாதனங்களின் திறனை மதிப்பிடுகையில் இனிமேல் இந்த வசதியே உரைகல்லாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. இந்த மாதத் தொடக்கத்தில் லுக் அவுட் என்னும் புரோக்கிராம் ஒன்றை மைக்ரோசொப்ட் நிறுவனம் வாங்கியிருந்தது. இந்தப் புரோக்கிராம் அவுட் லுக் இமெயில் பயன்படுத்துபவர்களின் இணைய மற்றும் இமெயில் தொடர்புகளைக் கண்டறியும் தன்மை உடையது. இந்தப் புரோக்கிராம் ஹார்ட் டிஸ்க்கில் உள்ளவற்றையும் கண்டறியும் தன்மை உடையது. இந்தப் புரோக்கிராம் ஹார்ட் டிஸ்க்கில் உள்ளவற்றையும் கண்டறியும் திறன் உடையதாகவும் உள்ளது. மைக்ரோசொப்ட் இந்த புரோக்கிராமினைத் தன் தேடுதல் சாதனத்தில் பயன்படுத்திக் கொள்கின்றதா என்று அறிவிக்கப்படவில்லை.

## கம்ப்யூட்டரைத் தூசி தட்டுங்கள்

உங்கள் கம்ப்யூட்டரின் சி.பி.யூ வின் கபினற்றைக் கழற்றி ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டதா? என்ன தான் ஏ.சி அறைக்குள் இருந்தாலும் தூசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் உள்ளே சென்று மொத்தமாய் சேர்ந்திருக்கும். ஏ.சி அறை இல்லாமல் தூசி வரும் அறை என்றால் நிச்சயமாய் ஏகப்பட்ட தூசி உள்ளே சென்று மொத்தமாகச் சேர்ந்திருக்கும். இதனை நீக்காவிட்டால் அது கம்ப்யூட்டர் இயங்குவதை நிச்சயம் பாதிக்கும். எனவே மூன்று மாதங்களைப் பயன்படுத்தி தூசியை நீக்க Air Player அல்லது வேறு சாதனங்களைப் பயன்படுத்தி தூசியை நீக்க முயற்சிக்கவும். இந்த சாதனங்கள் எதுவும் இல்லை என்றால் சிறிய பிரஷ் கொண்டு தூசியை நீக்கவும். இவ்வாறு நீக்கும் போது ஈரம் படியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் தூசியும் ஈரமும் சேர்ந்து கெட்டியாகிவிடும். பின் அதனை நீக்குவது கடினமாகும்.

## எக்ஸ்பி அப்டேற் பதிப்பு

விண்டோஸ் எக்ஸ்பி இயக்கத் தொகுப்பிற்கென வெகுகாலமாக எதிர்பார்த்து வந்த அப்டேற் தொகுப்பு விரைவில் வெளிவர இருப்பதாக மைக்ரோசொப்ட் அ றிவித்துள்ளது. பேர்சனல் கம்ப்யூட்டருக்கு இது அதிக பாதுகாப்பினை அளித்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சேர்விஸ் பக் 2 என அழைக்கப்படும் இந்தத் தொகுப்பு இன்னும் இரண்டு வார காலத்தில் விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு இணையம் வழியாகத் தரப்படும். இந்த அப்டேற் தொகுப்புடன் கூடிய விண்டோஸ் எக்ஸ்பி தொகுப்பு வரும் ஒக்ரோபர் மாதத்தில் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும். இந்த அப்டேற் தொகுப்பை உருவாக்குவதில் மைக்ரோசொப்ட் நிறுவனம் ஏறத்தாழ 30 கோடி டொலர் செலவழித்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. சேர்விஸ் பக் என்பது ஏற்கனவே விண்டோஸ் எக்ஸ்பி தொகுப்பினை வாங்கிப் பயன்படுத்துவோருக்கு இலவசமாகத் தரப்படும் தொகுப்பாகும். இத்தொகுப்பு பாதுகாப்பு சம்பந்தமான குறைகளை நீக்குவதோடு புதிய வசதிகளையும் தரும்.

## எக்செல் செல்(ExcelCell)களில் கொப்பி செய்தல்

எக்செல் வேர்க்ஷீட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கையில் ஒரு செல்லில் இருக்கின்ற டேற்றாவைப் பக்கத்தில் இருக்கின்ற செல்லில் கொப்பி செய்ய வேண்டுமா? இதோ ஒரு சுருக்க வழி. மேலே இருக்கின்ற செல்லில் உள்ள டேற்றா வேண்டுமென்றால் கொன்ட்ரோல் + டி (Ctrl +D) கொடுக்கவும். இதனை ஒன்றென இல்லாமல் பல செல்களில் கொப்பி செய்திட வேண்டுமா? எந்த செல்களில் எல்லாம் கொப்பி செய்திட வேண்டுமோ அதனை எல்லாம் ஹைலைட் செய்திடவும். இதற்கு மவுஸ் கேசருடன் ஷிப்ற் கீயை இணைத்துப் பயன்படுத்தலாம். அதன் பின் கொன்ட்ரோல் + டி (Ctrl + D) கொடுக்கவும். இப்போது அனைத்து செல்களும் அந்த டேற்றாவுடன் காட்சி அளிக்கும்.


கிடையாக இந்த மாற்றல் வேலையை மேற்கொள்ள வேண்டுமா? இடது புறம் உள்ள செல்லில் உள்ள டேற்றாவை வலது புறம் கொண்டு வர வலது செல்லுக்குப் போய் Ctrl + R கொடுக்கவும். முன்பு கூறியது போல பல செல்களில் கொப்பி செய்திட அதே வழியைப் பின்பற்றலாம்.

## Program பெயர்களை ஒழுங்குபடுத்த

*Start அழுத்தி அதில் வரும் மெனுவில் உள்ள புரோக்கிராம் பிரிவில் கிளிக்செய்து நாம் நமக்கு வேண்டிய software தொகுப்பினை இயக்குகின்றோம். பல வேளைகளில் நாம் தேடும் புரோக்கிராம்கள் எங்கு உள்ளன என்று நமக்கு மறந்து போகின்றது. அது மட்டுமன்றி அவை அகரவரிசையிலும் இருக்காது.*

*இவற்றை ஆங்கில அகர வரிசைப்படி அடுக்கி வைத்தால் நன்றாக இருக்கும் அல்லவா? அடுக்குவதற்கு கீழ்க்கண்ட வழியினைப் பின்பற்றுங்கள்.*

*ஸ்ரார்ட் பட்டினை அழுத்தி புரோக்கிராம் பிரிவினைப் பெறுங்கள். பின்பு Program group ஐயும் தேர்ந்தெடுங்கள். அதில் மவுஸின் கேசரை வலது பக்கமாக கிளிக் செய்திடவும்.அதில் வரும் மெனுவில் என்ற பிரிவைத் தேரிந்தெடுத்தால் அந்தப் பிரிவில் உள்ள புரோக்கிராம்கள் அனைத்தும் அகர வரிசைப்படுத்தப்பட்டு விடும். பின் அவற்றைத் தேடிப் பெறுவது எளிதாகிவிடும். இருப்பினும் உங்களுக்கு மிகவும் பிரியமான புரோக்கிராமை அகரவரிசையிலிருந்து எடுத்து முதல் புரோக்கிராமாக வைத்திட வேண்டுமென்றால் அப்படியே மவுஸால் அழுத்தி தேவையான இடத்தில் வைத்துக்கொள்ளலாம். இந்த வசதி எப்போதும் உண்டு.*



"It's the latest innovation in office safety. When your computer crashes, an air bag is activated so you won't bang your head in frustration."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரில் 7வது தமிழ் இணைய மாநாடு

"நாளைய உலகில் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம்" குறித்து விரிவாக விவாதிக்கும் இந்த ஆண்டின் தமிழ் இணைய மாநாடு டிசம்பர் மாதம் 11, 12 ஆகிய நாட்களில் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற உள்ளது. இதனை தமிழ் இணைய மாநாடுகளை நடத்தி வரும் உத்தமம் அமைப்பின் தலைவர் திரு.முத்துநெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இணையத்தில் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் மொழிகளில் ஒன்று தமிழ் இன்று இணையத்தில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தி செய்யக்கூடிய செயல்களில் பெரும்பாலானவற்றை அநேகமாக அனைத்தையும் தமிழ் மொழியைப் பயன்படுத்தியே செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சியை மேம்படுத்தவும், தரப்படுத்தவும் உலகத் தமிழ் தகவல்கள் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) 1997 ம் ஆண்டு துவங்கி ஆண்டுதோறும் அனைத்துலக மாநாடுகளை நடத்தி வருகிறது. இந்த வரிசையில் இந்த ஆண்டு நடைபெற இருப்பது 7 வது தமிழ் இணைய மாநாடு ஆகும்.

இந்த 7 வது தமிழ் இணைய மாநாடு டிசம்பர் 11, 12 தேதிகளில் சிங்கப்பூரில் நடைபெற உள்ளது. இந்த அனைத்துலக மாநாடு சிங்கப்பூரில் நடைபெறுவது இது மூன்றாவது முறை.

"நாளைய உலகில் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம்" என்ற பொருளில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில், தமிழ்த் தகவல் தொடர்பான பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன. பல நாடுகளைச் சேர்ந்த சுமார் 50 கணனி வல்லுநர்களும், முன்னணிக் கணனி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

இந்த ஆண்டு நடைபெற உள்ள இந்தத் தமிழ் இணைய மாநாடு இதற்கு முந்தைய மாநாடுகளிலிருந்து சற்று வேறுபட்டிருக்கும். தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்தின் வர்த்தக சமூக பயன்பாடுகள் குறித்த விவாதங்களைக் குறைத்துக் கொண்டு, தொழில்நுட்ப அம்சங்களில் இந்த மாநாடு அதிகம் கவனம் செலுத்தும்.

"இரண்டாயிரமாவது ஆண்டு மிகப் பெரிய அளவில் தமிழ் இணைய மாநாட்டை சிங்கப்பூர் நடத்தியதைத் தொடர்ந்து நடைபெற்ற தமிழ் இணைய மாநாடுகள் பெரிய அளவிலேயே நடைபெற்று வருகின்றன. தொழில்நுட்பத்தை ஆழ்ந்து பரிசீலிக்கும் விதமாக முதன்முறையாக சிறிய அளவில் இப்போது சிங்கப்பூரில் மாநாடு நடக்க உள்ளது. தமிழ்த் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடுகளை மக்களிடம் எடுத்துச் செல்வது எத்தனை முக்கியமோ அந்த அளவிற்கு மாறிவரும் தொழில்நுட்பங்களில் தமிழுக்கு உரிய இடம் கிடைப்பது குறித்து ஆராய்வதும் முக்கியமானது" என்று நெடுமாறன் தெரிவித்தார். "இந்த மாறுபட்ட வடிவத்தையும் சிங்கப்பூர் தான் அறிமுகப்படுத்த உள்ளது" என்றும் அவர் கூறினார்.

2004 ம் ஆண்டிற்கான தமிழ் இணைய மாநாட்டை நடத்துவதற்குரிய அனைத்துலக அமைப்புக் குழு, சிங்கப்பூர் ஏற்பாட்டுக்குழு ஆகியவற்றையும் உத்தமம் அறிவித்துள்ளது.

இந்த அனைத்துலக மாநாட்டை சிங்கப்பூரில் நடத்துவதற்கு கிடைத்த வாய்ப்புக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த சிங்கப்பூர் மாநாட்டுக் குழுவின் தலைவர் திரு. அருண் மகிழ்நன், "சிங்கப்பூரில் தமிழ் இணைய மாநாடு நடைபெறும் போதெல்லாம் தமிழ் சமூகம் பலனடைகிறது. அனைத்துலகத் தமிழ் சமூகத்திற்கு நாமும் ஒரு சிறிய அளவில் உரிய பங்களிப்பு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்" என்று தெரிவித்தார்.

மாநாட்டின் நிகழ்ச்சி நிரல், வாசிக்கப்படவுள்ள கட்டுரைகளுக்கான அறிவிப்பு, பேராளர் பதிவு, பயணம் மற்றும் தங்குமிட ஏற்பாடுகள் ஆகியவை குறித்து உத்தமம் அமைப்பின் தலைமைச் செயலகம் அவ்வப்போது அறிவித்து வரும்.

### RM என்ற Extension கொண்ட File

Real Media format இலான இந்த file களைப் படிக்க Real Player சொப்ட்வெயார் தேவை. அதை www.real.com என்ற தளத்தில் இருந்து டவுண்லோட் செய்யுங்கள். இலவசமாகவே டவுண் லோட் செய்து கொள்ளலாம்.

**If you like this site - share it with a friend by using the e-mailer to the right....**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழைய கம்ப்யூட்டரின் புதிய பயன்பாடுகள்

புதிது புதிதாய்ப் பல பயன்பாட்டு சொப்ட்வெயார் தொகுப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் நம்மிடம் உள்ள பழைய கம்ப்யூட்டர்களோ அவற்றில் சிலவற்றை ஏற்க மறுக்கின்றன. அதிவேக சிப், அதிக அளவில் றொம் நினைவகம் என இன்னும் பல புதிய அளவிலான பாகங்கள் அடங்கிய கம்ப்யூட்டரைக் கேட்கின்றன. இதனால் பலரும் புதிய கம்ப்யூட்டரை வாங்கத் திட்டமிட்டு வாங்குகின்றனர். அதுவரையில் சரி. அந்தப் பழைய கம்ப்யூட்டரை என்ன செய்வது? நிறையப் பேர் முன்பு கம்ப்யூட்டர் வந்த அட்டைப் பெட்டிகளைத் தேடி எடுத்து அதில் கம்ப்யூட்டர் சி.பி.யு, மொனிட்டரை வைத்து கயிற்றால் கட்டி தூக்கி வைத்து விடுகின்றனர். ஆனால் சிலர் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கின்றனர்.



பழைய கம்ப்யூட்டருக்கு பேரீட்சைப் பழம் கூடக் கிடைக்காது என்று பலர் வேடிக்கையாகக் குறிப்பிடுவது உண்டு. பழைய காருக்கு, சைக்கிள்களுக்கு என பழைய பொருட்களுக்கு கிடைக்கின்ற மரியாதை பழைய கம்ப்யூட்டருக்குக் கிடையாது என்பது தான் உண்மை.

பழைய கம்ப்யூட்டரை என்ன செய்யலாம் என்று சிறிது எண்ணிப் பார்ப்போமா!

### (i) விற்று விடுங்கள்

தெரிந்தவர்கள், நண்பர்கள் என எல்லோரிடமும் சொல்லி வையுங்கள். அதிகம் பணம் செலவழிக்கத் தயாராக இல்லாத யாராவது அடிமாட்டு விலையில் உங்கள் கம்ப்யூட்டரை விலைக்குக் கேட்கலாம். கொடுத்து விடுங்கள். பழைய எலக்ட்ரோனிக் பொருட்களுக்கு அதிலும் கம்ப்யூட்டருக்கு மதிப்பு கிடையாது என்பதை மறவாதீர்கள். ஐந்நூறு அல்லது ஆயிரம் ரூபாய் கிடைத்தால்க் கூட விற்றுவிடுங்கள்.

குறைந்த விலைக்கு விற்க மாட்டேன். வீட்டில் அலங்காரப் பொருளாக பழைய கம்ப்யூட்டர் இருந்து விட்டுப் போகட்டும், அல்லது டேபிள் வெயிட்டாக அமரட்டும் என நீங்கள் விரும்பினால் உங்களைத் திருத்த முடியாது. சேர்வீஸ் எஞ்சினியர்களிடம் சொல்லி வையுங்கள். அவர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஏ.எம்.சி, செய்வதாக இருந்தால் அவர்களுக்குப் பழைய கம்ப்யூட்டர் தேவைப்படலாம்.

### (ii) பாகங்களைக் கழற்றி விற்று விடுங்கள்

கம்ப்யூட்டரில் உள்ள எல்லா ஹார்ட்வெயார் உறுப்புக்களையும் கழற்றித் தனித்தனியாக விற்க முயலுங்கள். கீ போர்ட், மதபோர்ட், ஹார்ட் டிரைவ், வீடியோ கார்ட், நெட்வேர்க் கார்ட் போன்றவற்றில் ஏதாவது ஒன்று பழைய கம்ப்யூட்டரை வைத்துக்கொண்டு Spare Sparts க்காக அலைகிற யாருக்காவது தேவைப்படலாம்.

eBay போன்ற ஏல தளங்களில் நுழைந்து நீங்கள் விற்க விரும்புகின்ற பொருளின் பெயர், மொடல் வரிசை எண், எதிர் பார்க்கின்ற விலை போன்றவற்றைக் கொடுங்கள். யாராவது வாங்கலாம்.

### (iii) இலவசமாகக் கொடுங்கள்

நிறைய பள்ளிக் கூடங்களில், சமுதாயக்கூடங்களில் கம்ப்யூட்டர்களே கிடையாது. நிறைய சேரிகளில், கிராமங்களில் வாழும் குழந்தைகள் கம்ப்யூட்டர்களைப் பார்த்ததே கிடையாது. உங்கள் கம்ப்யூட்டரை இலவசமாகக் கொடுங்கள். அந்தக் குழந்தைகள் பயன்பெறட்டும். சமூக நலனில் அக்கறை கொண்ட பல அமைப்புக்கள் பழைய கம்ப்யூட்டர்களை வைத்து மக்களிடையே கம்ப்யூட்டர் அறிவை வளர்க்கின்றன. உங்கள் கம்ப்யூட்டரை ஏதாவது ஒரு அமைப்புக்கு இலவசமாகக் கொடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (iv) Hard Ware பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்

மதர்போர்ட் என்றால் என்ன? அதில் என்னென்ன உள்ளன? ஹார்ட் டிரைவை எவ்வாறு கழற்றி மாட்டுவது? நினைவகச் சிப், கம்ப்யூட்டரில் எங்கே உள்ளது? ஹார்ட் டிஸ்க் மற்றும் புளொப்பி டிஸ்க்குக்கான கேபிள்களில் எது பவர் கனெக்ரர்? எது டேற்றா கனெக்ரர்? எதனை எப்படி எங்கு செருகுவது?

மேற்படி கேள்விகளுக்கான பதில்களைத் தெரிந்து கொள்ள உங்கள் கம்ப்யூட்டரை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து பாகங்களை அடையாளம் கண்டு மீண்டும் அவற்றை ஒன்று சேருங்கள். நான்கைந்து முறை முயற்சி செய்து அவற்றை நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

## (v) Network ஐ ஏற்படுத்துங்கள்

உங்கள் பழைய கம்ப்யூட்டர் மற்றும் புதிய கம்ப்யூட்டர் ஆகியவற்றை வைத்து ஒரு நெட்வேர்க்கை ஏற்படுத்திக் கொள்ளலாம். இரண்டு நெட்வேர்க் கார்ட்டுகள், கேபிள் ஆகியவை போதும். அதிக பட்சமாக ரூபாய் ஆயிரம் இதற்கு செலவாகும்.

நெட்வேர்க்கின் பலனை நீங்கள் அனுபவிக்கலாம். ஒரு இன்டர்நெட் எக்கவுண்டை இரு கம்ப்யூட்டர்களில் ஒரே நேரத்தில் பயன்படுத்தலாம்.

Multiplayer Games பல இன்ரர்நெற்றில் இலவசமாகக் கிடைக்கின்றன. அவற்றை இரு கம்ப்யூட்டர்களிலும் நிறுவினால் இருவரும் சேர்ந்து விளையாடலாம். ஒருவரை எதிர்த்து ஒருவர் விளையாடிக் களிப்புறலாம். கம்ப்யூட்டரை எதிர்த்து விளையாடுவதை விட மனிதருடன் விளையாடுவது நன்றாக இருக்கும் அல்லவா?

## (vi) Linux ஐ நிறுவி மகிழுங்கள்

விண்டோஸிற்குப் போட்டியாக லினக்ஸ் என்ற இலவச ஒப்பரேட்டிங் சிஸ்ரம் உள்ளது. அதை உங்கள் கம்ப்யூட்டரில் நிறுவிப் பயன்படுத்துவதில் தயக்கமா உங்களுக்கு? அப்படியானால் அதை உங்கள் பழைய கம்ப்யூட்டரில் நிறுவிப் பாருங்களேன். விண்டோஸைப் போலல்லாமல் ஓரளவு சுமாரான ஆற்றல் கொண்ட ஹார்ட்வெயாரையும் லினக்ஸ் ஏற்கும்.

பழைய கம்ப்யூட்டரில் லினக்ஸைப் பயன்படுத்தி மனநிறைவு ஏற்பட்டால் புதிய கம்ப்யூட்டரில் லினக்ஸை நிறுவி அதற்கு நீங்கள் மாறலாம்.

# உள்ளங்கை கம்ப்யூட்டர் வாங்கலாமா?

**Personal Digital Assistant or Hand held Computer** என அழைக்கப்படுகின்ற உள்ளங்கை கம்ப்யூட்டரை பலரும் இப்பொழுது வாங்க ஆரம்பித்துள்ளார்கள். சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு செல்லுகின்ற இந்த குட்டிக்கம்ப்யூட்டரில் உங்கள் தகவல்களை சேமிக்கலாம், முகவரிகளைப் போட்டு வைக்கலாம், செய்ய வேண்டிய வேலைகளை நினைவுபடுத்த வைக்கலாம், உங்களுடைய நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தலாம்.

Palm, Compaq, Hp, IBM போன்ற பல நிறுவனங்கள் பி.டி.எ கம்ப்யூட்டர்களை விற்கின்றன. Laptop எனப்படுகின்ற மடிக்கம்ப்யூட்டரைக் காட்டிலும் சிறியதாக இருக்கின்ற கம்ப்யூட்டர் தான் வேண்டும் என்பவர்கள் பிடிஏ ஐ வாங்கலாம். பிடிஏ ஐயும் , டெஸ்க்ரொப் கம்ப்யூட்டரையும் சீரியல் அல்லது யு.எஸ்.பி கேபிள் மூலம் இணைக்க முடியும் என்பதால் ஒன்றில் உள்ள விபரங்களை மற்றொன்றுக்குக் கொண்டுவர முடியும். இரண்டில் உள்ள டேற்றாவையும் ஒத்த நிலைக்கு கொண்டுவரலாம்.

பி.டி.ஏ யை வாங்கும் முன்பு உங்களுடைய தேவை என்ன என்பதை முதலில் தீர்மானியுங்கள். வெறும் சொந்தத் தகவல்களை போடப் போகிறீர்களா? இ-மெயில் போன்றவற்றை இறக்கப் போகிறீர்களா? நெற்வேர்க்கில் இணைக்கப் போகிறீர்களா? வண்ணத்திரை போதுமா?

மேற்படி கேள்விகளை மனதில் கொண்டு கீழே தரப்பட்டுள்ள ஆலோசனைகளைப் படியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அளவு:-** பல அளவுகளில் பி.டி.ஏ கம்ப்யூட்டர்கள் உள்ளன. கிரடிற் கார்ட் அளவு, உள்ளங்கை அளவு, காசோலை அளவு என் பல வித அளவுகளில் உள்ளன. கிரடிற் கார்ட் அளவு கொண்ட பி.டி.ஏ இல் ரைப் செய்வது கடினம். திரை சிறியதாக இருப்பதால் படிப்பதற்கும் கடினம். காசோலை அளவு பி.டி.ஏ யில் நல்ல கீபோர்ட், பெரிய திரை, அதிக வசதிகள் என இருந்தாலும் அதை சட்டைப் பையில் வைத்து எடுத்துச் செல்வது கடினம். எனவே உள்ளங்கை அளவு கொண்ட பி.டி.ஏ யை வாங்கலாம்.

## Operating System மற்றும் Applications

பி.டி.ஏ கம்ப்யூட்டர்களின் Palm 05 என்ற ஒப்பரேட்டிங் சிஸ்ரம்தான் இவ்வளவு நாட்களாக அரசாட்சி செய்து வந்தது. இதற்கு மாற்றாக Windows CE என்ற ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தை மைக்ரோசொப்ட் வெளியிட்டது. அதை நிறுத்திவிட்டு Pocket PC 05 என்ற புதிய ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தை மைக்ரோசொப்ட் வெளியிட்டு வெற்றிக்கொடி நாட்டியுள்ளது.

Palm ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தில் இயங்குகின்ற பி.டி.ஏ கம்யூட்டர்கள் அளவில் சிறியனவாக, ஆற்றலில் பன்மடங்கு பெரியனவாக உள்ளன. மேலும் ஏராளமான அப்ளிக்கேஷன்கள், ஷேவர், ஃபிரீவெயார் புரோக்கிராம்களும் இதில் இயங்குபவையாக உள்ளன.

பொக்கற் பி.சி ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தில் இயங்குகின்ற பி.டி.ஏ கம்ப்யூட்டர்களில் நிறைய அப்ளிக்கேஷன்கள் உள்ளன என்றாலும் பாம் ஒப்பரேட்டிங் சிஸ்ர பி.டி.ஏ கம்யூட்டர்களை விட அவை குறைவு என்பதை மறுப்பதற்கில்லை.

Databook, Address book, Mail, To-do list, Memo pad, Appointment போன்ற அடிப்படை வசதிகளுக்கான சொப்ட்வெயார்கள் பி.டி.ஏ யில் உள்ளனவா எனக் கேட்டுக் கொள்ளவும்.

**மொனிட்டர்:-** கறுப்பு-வெள்ளை அல்லது வண்ண எல்.சி.டி (LCD) திரைகள் கொண்ட பி.டி.ஏக்கள் வெளிவந்துள்ளன. *320 x 240* தெளிவு கொண்ட மொனோகுறோம் மொனிட்டர்கள் கொண்ட பி.டி.ஏக்களை வாங்கலாம்.

வண்ண மொனிட்டர்களில் Passive – matrix டிஸ்பிளேக்குப் பதில் Active – matrix டிஸ்பிளே நல்லது. அதிக பிரகாசமான, கூர்மையான, துல்லியமான காட்சிகள் தெரியும்.

**நினைவகம்:-** 512 KB நினைவகம் முதல் 32 MB நினைவகம் கொண்ட பி.டி.ஏக்கள் உள்ளன. சில மொடல் பி.டி.ஏக்களில் நம் விருப்பப்படி நினைவகத்தை அதிகரிப்பதற்கு வசதியாக விரிவாக்க வாயில்களைக் கொடுத்துள்ளார்கள். Compact Flash or PCMCIA கார்ட்டுகளில் வருகிற நினைவகங்களைக் கையாளும் ஆற்றல் பெற்ற பி.டி.ஏக்களும் உள்ளன.

**போர்ட்டுகள்:-** பி.டி.ஏ யை டெஸ்க்ரொப் கம்ப்யூட்டரில் இணைத்தால் தான் ஒன்றில் உள்ள டேற்றாவை மற்றொன்றுடன் பங்கிட முடியும். வழக்கமான சீரியல் போர்ட் அல்லது இப்போதைய யு.எஸ்.பி போர்ட் அல்லது இன்னும் நவீனமாக Infrared transreceiver போர்ட் கொண்ட பி.டி.ஏன் விலை அதிகம். எனினும் வயர்லெஸ் வசதி கிடைப்பதால் விலை அதிகம் கொடுப்பதில் தவறில்லை.

**பற்றரி:-** AAA அளவு கொண்ட alkaline பற்றரிகள் பொருத்தப்பட்ட பி.டி.ஏக்கள் நிறைய வெளி வந்துள்ளன. Nicked CAdmium (ni-cad), Nickel Metal Hydride (nimh) or lithium ion பற்றரிகளும் உள்ளன. இவற்றை சார்ஜ் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கூடுதல் ஹார்ட்வெயார் உறுப்புகள்


பெரிய பி.டி.ஏக்களில் பெரிய கீபோர்ட்டுகள் உள்ளன. எனினும் ஒரு சில சிறிய பி.டி.ஏக்களில் பெரிய கீ போர்ட்டுகள் தேவைப்பட்டால் இணைக்க முடியும். ஸ்டைலஸ் மற்றும் தொடு-திரை கொண்ட பி.டி.ஏக்கள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி விபரங்களைப் பதிவு செய்யலாம். On – Screen Keyboard என அழைக்கப்படுகின்ற திரைகளில் எழுத்துக்கள் இருக்கும். அதைத் தட்டத் தட்ட எழுத்துக்கள் டிஸ்பிளேயில் வரும். Handwriting recognition செய்கிற ஆற்றல் கொண்ட பி.டி.ஏக்களும் வெளிவந்துள்ளன. உங்களது எழுத்தை அப்படியே கம்ப்யூட்டர் டெக்ஸ்ட்டாக மாற்றும் ஆற்றல் கொண்டவை அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸெனித் LAP-TOP கம்ப்யூட்டர்

சென்ற ஆண்டில் ரூ.285 கோடிக்கு வர்த்தகம் மேற்கொண்ட ஸெனித் நிறுவனம் நடப்பு நிதியாண்டில் ரூ.350 கோடிக்கு வர்த்தகம் மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்கு தன்னுடைய புதிய லப்-டப் கம்ப்யூட்டர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளது. சென்ற வாரம் ஏழு வகையான கம்ப்யூட்டர்களை ரூ.32000 முதல் ரூ.70000 விலையில் விற்பனைக்கு ஸெனித் அறிமுகப்படுத்தியுள்ளது. நிறுவனம் ஒன்றின் தலைவர் முதல் ஊழியர் வரை பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகள் பயன்படுத்துவதற்கேற்ப இவை வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஸெனித் நிறுவனம் அறிவித்துள்ளது. ஒரு எடையுள்ள பிரசிடியோ லப்-டப் ரூ.72,000 க்குக் கிடைக்கின்றது. இதே வகை லப்-டப் கம்ப்யூட்டர்கள் பிற நிறுவனங்கள் ரூ.1லட்சத்தில் விலையிடப்பட்டுள்ளதாக ஸெனித் நிறுவனப் பத்திரிகைக் குறிப்பு கூறுகின்றது.




லப்-டப் கம்ப்யூட்டர் விற்பனை இந்தியாவில் தற்போது தான் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில் மேலும் பல நிறுவனங்கள் இது போன்ற விலை குறைவுள்ள லப்-டப் கம்ப்யூட்டர்களை அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# எலக்ரோனிக் சிப் யார் தந்தது?



நாம் பயன்படுத்தும் 90 சதவீதப் பொருட்களில் சிப் இல்லாத பொருட்களே இல்லை எனலாம். எந்த சிப்? அது தான் எலக்ரோனிக் சிப். கம்ப்யூட்டர், கார், பொம்மை, ரீவி, மின்னடுப்பு, வீடியோ சமாச்சாரங்கள், சிலவகைக் கடிகாரங்கள், கோலிங்பெல்கள், டெலிபோன், செல்போன் முதல் சற்றலைற்கள் வரை இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. ஐ.சி அதாவது இன்டக் ரேய்டட் சிப் என்பது இதன் பொதுப்பெயராக இருந்தாலும் இதனை சிப் எனவே நாம் அழைக்கின்றோம். 45 ஆண்டுகளுக்கு முன்னால் ஜேக் கில்பி என்னும் அறிவியல் அறிஞர் இதனைக் கண்டு பிடித்தார். ஒரு சிறிய ஜேர்மானியம் என்னும் பொருளில் சில ட்ரான்சிஸ்ரர்களையும் மற்றப் பொருட்களையும் இணைத்து இந்த சிப் பொருத்தப்பட்டது. எப்படிக் கார் இயங்க எரிபொருள் இன்ஜின் ஒன்று தேவையோ அது போல இந்த எலக்ரோனிக் சிப் அது பொருத்தப்பட்டுள்ள சாதனம் இயங்கத் தேவைப்படுகின்றது. இதன் பல்வேறு பரிமாணங்கள் குறித்த தகவல்களை அறிய நீங்கள் காண வேண்டிய இணைய தளத்தின் முகவரி: www.cnn.com/TECH/9709/09/chip.inventor



**DVD** டிஸ்க்கில் உள்ள ஒரு திரைப்படத்தை கம்ப்யூட்டரில் கொப்பி செய்யும் போது கார்ட்டிஸ்க்கில் ஏராளமான இடம் தேவைப்படுவதால் திரைப்படத்தை சுருக்கிப் பதிந்துகொள்வதற்கான வழி இதோ!

*DVD போமற்றில் உள்ளதை DIVX போமற்றுக்கு மாற்றினால் அளவு மிகவும் குறைந்து விடும். பின் அதனை உங்கள் கார்ட்டிஸ்க்கில் பதிந்து கொள்ளலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


✍ : M.Janarthanan
(BBM, Tally Graduate) Lecturer.
Jana Computer Technologists.



## Company information களை பராமரித்தல் எப்படி?


**Company information களைப் பராமரிக்கப் பின்வரும் வழி முறைகளைப் பின்பற்றவும்.**

- Start => Programs => Tallyees 6.3 => Tally 6.3 என்ற Button களை click பண்ணவும்.
- படம் 1 இல் உள்ளவாறு create company ஐ click பண்ணவும்.




படம் - 1

- படம் 2 இல் உள்ளவாறு Company creation என்ற தலைப்பில் Screne ஒன்று தென்படும்




படம் - 2

- Screne இல் உள்ள விபரங்களைப் பூர்த்தி செய்து ஒரு Company இன் விபரங்களை உருவாக்கிப் பராமரிக்கலாம்.

## Company information களை Create செய்யும் Screne இல் உள்ள விபரங்கள்

### Directory Details

- இங்கு எமது Company பற்றிய details எங்கு store ஆகவேண்டும் என்பதை Type செய்து கொள்ள வேண்டும்.
- இங்கு C:\Tally\Data என்பது ஆகக் காணப்படும்.
- இதை எமது விருப்பத்திற்கேற்ப மாற்றலாம்.
- இதை நாம் எமது விருப்பத்திற்கேற்ப Directory என்றிருப்பதற்கு எதிராக வழங்கிக் கொள்ளலாம்.

### Name

இங்கு Company Name ஐ Type பண்ணிக் கொள்ளலாம். ஆனால் ஒரே பெயரில் இரு Company கள் இருக்க முடியாது.

### Mailing Name

Name என்ற பகுதியில் வழங்கிய பெயர் இதில் automatic ஆக வெளிவரும். ஆனால் இதை மாற்றலாம். இது கடிதத் தொடர்புக்கு உதவும்.

### Address

இங்கு Company Address ஐ பதிந்து கொள்ளலாம்.

### Income Tax Number, Local Sales Tax Number, Inter State Sales Tax Number

இங்கு Income Tax, Local sales tax மற்றும் Inter-state sales tax (இருப்பின் மட்டும்) எண்கள் போன்றவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

### Currency Symbol

இங்கு நாணயக் குறியீட்டை வழங்கலாம்.

Eg:- Rs. , $ , £



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Maintain**

Accounts Only பராமரிக்கப் போகிறோமா அல்லது Accounts with inventory பராமரிக்கப் போகிறோமா என முடிவெடுத்து இங்கு குறிப்பிடலாம்.

**Financial Year Form**

இங்குAccounting க்குரிய Financial Year ஐத் தீர்மானிக்க வேண்டும். இது சரியாக 12 மாதங்கள் எடுக்கப்படும்.

Eg:- 01/01/2004 என்றால் 31/12/2004 வரை Financial Year ஆகக் கருதப்படும்.

**Books beginning Form**

இங்கு எவ் நாளில் இருந்து கணக்குப் பதிவு ஆரம்பமாகிறது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

**Tally Vault**

இங்கு Password ஐ Type செய்யலாம். இவ் Password இன் மூலம் Tally தகவல்கள் பத்திரமாகப் பாதுகாக்கப்படும். Password தெரியாதவர்கள் இதைப் பயன்படுத்த முடியாது. இதை மறந்தால் பார்வையிடவோ, பயன்படுத்தவோ முடியாது தகவல்கள் இழக்க நேரிடும்.

**Use Security Control**

இங்கு No என Type செய்யவும்.

## *Base Currency Information*

இதில் அடங்குபவை

**Base Currency Symbol**

நாணயக் குறியீட்டை Type செய்யலாம்.

Eg:- Rs.

**Formal Name**

நாணயக் குறியீட்டுக்கான முழுப் பெயரை இங்கு Type செய்யலாம். Rs. இற்கான முழுப் பெயர் Sri Lankan Rupees.

**Number of Decimal places**

தசம எண்கள் முடிவு செய்யப்படும்.

Eg:-தசம எண்கள் 2 என Type செய்தால், 2 தசம எண்களுடன் வெளிப்படும்.

**Show Accounts in Millions?**

மதிப்புக்களை Million இல் காட்ட வேண்டுமா? என்பதற்கு No என்று Type செய்யவும்.

**Is Symbol Suffixed to Amounts?**

பெறுமதிகளுக்கு முன் நாணயக் குறியீடு வழங்க வேண்டுமா? என்ற கேள்விக்கு No எனப் பதிலளித்தால் Rs.500 என்பதற்கு பதிலாக 500 எனக் காட்டும்.

**Put a space between Amounts and Symbol?**

பெறுமதிக்கும், நாணய குறியீட்டுக்கும் இடையே இடைவெளி கொடுக்க வேண்டுமா? என்ற கேள்விக்கு Yes என்று Type செய்தால்

Eg:- Rs.500 இடைவெளியுடன்

Rs.500 இடைவெளி இல்லை

## ஒன்றுக்கு மேற்பட்ட *Company Informations*

- இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட Company Information களைக கூடப் பராமரிக்கலாம்.
- அவ்வாறு உபயோகிக்கும் போது Company களைத் தனித் தனியாகப் பராமரிக்க வேண்டும். ஒரு நேரத்தில் ஒரு Company ஐ மட்டும் open செய்து பாவிப்பதன் மூலம் கணனி குழப்பமடையாமல் இருப்பதைப் பேணலாம்.

*(தொடரும்)*

அடுத்த இதழில்:-

***Company Information* களைப் பராமரிக்க ஓர் உதாரணம்**

Apple iMac



Rowenta Surfline Iron



**A Computer for Women ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MACRO MEDIA

# DREAMWEAVER MX

:K.Sanmuganathan
&
B. Nishan

தொடர் 16

## Form


இன்றைய தகவல் தொடர்பாடல் உலகில் இணையமையாதது இத்தகைய இணையப் பக்க வடிவமைப்பில் Form என்பது மிக அத்தியவசியமானது ஒன்றாகும். அதாவது Form என்பதனைக் கொண்டிராத இணையப்பக்கமானது User களுக்கு வெறுமனே ஒரு தகவலை மட்டும் தெரிவிக்கும். ஆனால் Form 2 கொண்டுள்ள இணையப் பக்கமானது User களிடமிருந்தும் தகவல்களையும் வேறுபலவற்றையும் பெற்றுக் கொள்வதுடன் User களுடைய தேவையைப் பெற்று பதிலளிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது Form என்பது நிறுவனங்களுக்கும் (அதாவது Saver Programmer க்கும்) வாடிக்கையாளர்களுக்கும் (அதாவது அந்நிறுவன பயனாளர்களுக்கும்) ஒரு நல்ல இடைவினையை ஏற்படுத்துகின்றது.

User இடமிருந்து தகவலுக்கான விமர்சனங்களைப்பெற இன்னொரு நபருடன் தொடர்பு கொண்டு நமக்குத் தேவையான தகவல்களைப் பெற, தேவையான நபரை பேட்டி / நேர்முகம் (Over the Internet) ஐக் காண்பதற்கு User உடைய கேள்விக்குப் பதிலளிக்க அதாவது Userஇன் வேண்டுகோளை நிறைவேற்ற, பணக்கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய, கல்வி மற்றும் e-commerce என்றழைக்கப்படும் மின்வணிகம் என பல்வேறு இணையப் பயன்பாடுகள் உள்ள இணையப் பக்கத்தை வடிவமைப்பதில் Form இன் பங்கு இன்றியமையாதது: அதாவது இது Client - Server ஐக் கொண்ட இணையப்பக்கத்தை உருவாக்க அவசியமானது. ஒவ்வொரு Form க்கும் Web Server உடன் தொடர்பு தேவையாகவுள்ளது. இதற்கு Server Side Program களை ASP(Active Server Page) JSP (Java Server Page) CGE (Commom Gateway Interface) என்பன பயன்படுகின்றன.


இனி DreamWeaver ஐப் பயன்படுத்தி எவ்வாறு இணையப்பக்கத்தில் Forms ஐ உருவாக்குவது என ஆராய்வோம்.

Insert Bar இல் உள்ள Form என்ற Tab ஐ Click செய்யும் போது உரு 1 இல் உள்ளவாறு Form Insert Box காணப்படும். இதில் 1 என்பதைத் தெரிவுசெய்வதன் மூலமோ அல்லது Insert Menu வில் உள்ள Form என்பதை தெரிவு செய்தும் Dream Weaver இல் Design view இற்குள் Dot Dot Line ஐக் கொண்ட ஒரு செவ்வகப்பெட்டி தெரியவரும். இவ்வாறு செவ்வக Red color box தெரியாவிட்டால் view => visualaids => Invisible Elements என்பதைத் தெரிவு செய்க.

இந்தப்பெட்டியினுள்ளே Form இன் Elements கள் உருவாக்கப்படும். அதாவது சிவப்பு நிற Dot Dot Line தான் Form இன் Boundary அதாவது (எல்லைகள் ஆகும்) Dream Weaver இன் Disign view இற்குள் தெரியும் இந்த சிவப்பு கலர் Dot Dot Line இணையப்பக்கங்களில் தோன்றாது. இவ்வாறாக Dream Weaver இல் Form ஐ தெரிவுசெய்த போது Property box ஆனது உரு 2 இல் உள்ளது போல் காணப்படும்.




உரு - 1




உரு - 2

இங்கு,

**Form Name** என்பதன் கீழுள்ள Text Box ஆனது Form இற்கு Name கொடுக்கப் பயன்படுகின்றது. ஒரே பக்கத்தில் சிலவேளை ஒன்றுக்கு மேற்பட்ட Form ஐ நாம் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படலாம். அப்போது நாம் Form களை Form Name ஐக் கொண்டுதான் அடையாளப்படுத்த முடியும். இங்கு நாம் Form Name என்ற பகுதியில் Form இற்கு Name ஐ வழங்காவிட்டால் இது தானாகவே Form 1, Firm 2, Form 3... என்ற ஒழுங்கில் Form இற்கு Name ஐக் கொடுக்கும். மேலும் இந்த Form களுக்கு வழங்கப்பட்ட Name தான் பின்னர் Server Side



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Program (ASP,ISP,CGI....) களுக்கு Form ஐ அடையாளப்படுத்தவும் உதவுகின்றது.

**Action** என்ற இடத்தில் Form இலுள்ள தகவல்கள், போய்ச்சேரவேண்டிய முகவரியைக் குறிப்பிட வேண்டும். அதாவது Form இலுள்ள தகவல்கள் போய்ச்சேர Server இன் பாதை (Path) குறிப்பிட வேண்டும். இதை இதன் அருகிலுள்ள Text Box இல் Type செய்யலாம். அல்லது அருகிலுள்ளதை கிளிக் செய்து குறிப்பிட்ட Server இன் பாதையை வழங்கலாம்.

**Method** என்பது Form இலுள்ள தகவல்கள் / உள்ளடக்கங்கள் (Contents) எவ்வாறு Web Server இற்கு சேருகிறது என்பதைக் குறிப்பிடுகின்றது. இங்கு இரு Method கள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் Get Method ஐ தற்போதைய காலத்தில் தெரிவு செய்வது குறைவு. ஏனெனில் Form இலுள்ள ஒரு குறிப்பிட்ட தொகையான தகவல்களையே அனுப்பலாம். அதாவது இது Limitations உடையது. ஆனால் Post Method ஆனது கட்டுப்பாடில்லாதது. எல்லா தகவல்களையும் அனுமதிக்கின்றது.

**Enctype** என்பது Encoding Type இன் குறுகிய வடிவமாகும். இது Server இற்கு எத்தகைய data அனுப்பப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டப் பயன்படும்.

**Target** என்பது ஏற்கனவே பல இதழ்களில் பல தடவைகளில் ஆராயப்பட்டுள்ளது.

(தொடரும்)

## கம்ப்யூட்டரில் ஒளிந்துள்ள ஒற்றர்கள்

உங்களுக்குத் தெரியுமா? இன்ரர்நெட்டில் இருந்து நீங்கள் டவுண்லோட் செய்த சொப்ட்வெயாரில் Trojan Horse இருக்கலாம் அல்லது அதனுள் Spyware இருக்கலாம். அல்லது முநல logger இருக்கலாம். இவற்றால் நீங்கள் பாதிப்புக்கு ஆளாகலாம். உங்கள் இரகசியங்கள் களவாடப்படலாம். இந்த விரோதிகள் என்ன செய்கிறார்கள் அவர்களை எப்படி அழிப்பது எனப் பார்ப்போமா?

வெளிப்பார்வைக்கு நல்ல பிள்ளைபோல் Trojan Horse அடங்கிய சொப்ட்வெயார் தெரியும். ஆனால் விரோதி உள்ளே ஒழிந்திருக்கும். என்ன வேலை அந்த விரோதிக்கு கொடுக்கப்பட்டுள்ளதோ அதை நேரம் பார்த்து செம்மையாக அது செய்து முடிக்கும்.

உங்களைக் கண்காணித்து அவ்வப்போது இரகசிய அறிக்கைகளை தன் எஜமானருக்கு அனுப்புகின்ற வேலையை Spyware செய்யும். எந்தெந்த வெப்தளங்களில் நுழைகிறீர்கள், என்ன மாதிரியான வெப்பக்கங்களில் அதிக நேரம் செலவிடுகிறீர்கள். எந்த சொற்களைப் பயன்படுத்தி தேடுகிறீர்கள் என்பனவற்றைக் கவனித்து அவருக்கு இரகசிய அறிக்கைகளை அனுப்பும்.

வெப் ஐ அடிப்படையாகக் கொண்ட இ-மெயில்களைத் திறந்து நீங்கள் படித்தால் அதிலுள்ள விபரங்களை அப்படியே கொப்பி செய்து எஜமானாருக்கு அனுப்புகின்ற ஸ்பைவேர் புரோக்கிராம்களும் உள்ளன.

கீ போர்ட்டில் என்னென்ன ரைப் செய்கிறீர்கள் என்பதை அப்படியே கைப்பற்றி தன் எஜமானாருக்கு அனுப்புகின்ற புரோக்கிராம்களை Key logger என்பர். உங்களது லொகின் பெயர், பாஸ்வேர்ட், கிறடிற்காட் எண்கள் போன்ற முக்கிய விஷயங்கள் இதனால் பறிபோகலாம். பொதுவாக சைபர் கபே போன்ற இடங்களில் இந்தப் புரோக்கிராம்கள் அதிகமாகக் காணப்படும்.

Scumware எனப்படுகின்ற புரோக்கிராம்கள் வெப்தளத்தில் காணப்படுகின்ற வெப்பக்கங்களின் ரெக்ஸ்ற்களை மாற்றி விடும். அல்லது அவற்றின் செயல்களைத் திருப்பிவிடும். உங்களுக்கென சொந்தத் தளம் இருந்தால் இந்தப்புரோக்கிராம் பற்றிக் கவலைப்படலாம். இல்லையெனில் இதை கவனத்தில் கொள்ள வேண்டியதில்லை.

Browser helper objects எனப்படுகின்ற சிறு அப்ளிக்கேஷன்கள் பிரவுசருக்கு உதவுவதற்காக உள்ளன. ஆனால் இவை நமக்குத் தொல்லையாகக் கூட இருக்கலாம். நீங்கள் பார்வையிட்ட வெப்தளங்கள் டவுண்லோட் செய்கின்ற சொப்ட்வெயார்கள் பற்றிய தகவல்களை அவ்வப்போது தன் எஜமானருக்கு இவை தெரிவித்துக் கொண்டிருக்கும்.


இலவச புரோக்கிராம்கள் தானே அவற்றைப் பயன்படுத்தலாம் என்று நினைப்பீர்கள். ஆனால் Adware எனப்படுகின்ற advertising செய்கின்ற புரோக்கிராம் அதனுள் ஒளிந்துகொண்டிருக்கும் விபரங்களைப் பார்த்துப் பார்த்து சலிப்படைந்து விடுவீர்கள்.

விரோதிகளை அழிக்க ஸ்பைவேர்களை அழிக்க பல புரோக்கிராம்கள் உள்ளன. சில இலவசமாகவும் சில விலைக்கும் கிடைக்கின்றன. விலைக்கு வாங்குகின்ற ஸ்பைவெயார் -ஒழிப்பு புரோக்கிராமே மறைமுகமாக ஸ்பைவெயாராக செயல்படவும் செய்யலாம். கவனம்.

Lavasoft நிறுவனத்தின் Adware என்ற புரோக்கிராம் ஸ்பைவெயார் ஒழிப்பில் புகழ் பெற்றது. இதை www.lavasoft.com தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இலவசமாகக் கிடைக்கின்ற இப் புரோக்கிராம், கம்ப்யூட்டரின் நினைவகம், புளொப்பி உட்பட எல்லா ட்ரைவ்கள், விண்டோஸ் ரெஜிஸ்டரி போன்றவற்றில் ஸ்பைவெயார்கள் ஒளிந்துள்ளனவா எனத் தேடும்.

ஸ்பைவெயார், கீ லொக்கர், பிரவுசர் கெல்ப்பர் ஒப்ஜெக்ட் போன்றவற்றைத் தேடிக் கண்டு பிடிக்க Spybot Search & Destory என்ற மற்றொரு இலவச சொப்ட்வெயார் புரோக்கிராம் உள்ளது. இதை http:/security.kolla.de என்ற தளத்தில் இருந்து டவுண்லோட் செய்து கொள்ளலாம். இந்த சொப்ட்வெயாரின் கூடுதல் அம்சம் அதன் File shredder ஆகும். ஒரு கம்ப்யூட்டர் பைலை சுக்குநூறாக கிழித்துப்போட வேண்டும். எப்படி முயற்சித்தும் அந்தப் பைல் திரும்பக் கிடைக்கக் கூடாது என நீங்கள் நினைத்தால் இந்த சொப்ட்வெயாரை நீங்கள் பயன்படுத்தலாம்.

Spyware Blaster எனப்படுகின்ற மற்றொரு இலவச சொப்ட்வெயாரை www.wilderssecurity.com/spywareblaster.html என்ற தளத்தில் இருந்து பெறலாம். Activex controls மூலம் நுழைகின்ற ஸ்பைவெயார்களை அடையாளம் கண்டு அழிக்கும் ஆற்றல் இதற்குண்டு. அழித்த ஸ்பைவெயார்களை மீண்டும் கம்ப்யூட்டரில் நிறுவ முடியாத வகையில் விண்டோஸின் ரெஜிஸ்டரியில் இது மாறுதல்களைச் செய்து விடும். பிரவுசர் கெல்ப்பர் ஒப்ஜெக்ட்டுகளைக் கண்டு பிடித்து அழிக்க BHO Demon என்ற இலவச சொப்ட்வெயார் உள்ளது. இதை www.definiti vessolutions.com/bhodemon.htm என்ற தளத்தில் இருந்து பெறலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAYA 4.5

✍ : **Aadhi**
விரிவுரையாளர்
(Aizen Institute of Information Technology)

தொடர் 09

எடிட் பொலிகன் மெனுவில் காணப்படும் செலக்ஷன் தேர்வில் காணப்படும் சில முக்கிய கட்டளைகளைப் பார்ப்போம்.





பொலிகன் ஒப்ஜக்ட் ஒன்றை தோற்றுவித்து பின்பு அதை கொன்ரோல் வேர்டக்ஸ் மோடிற்கு மாற்றியமைத்து விரும்பிய புள்ளியை தெரிவுசெய்து செலக்ஷன் தேர்வில் காணப்படும் முதலாவது கட்டளையை அதாவது Grow Selection Region ஐ கொடுப்பீர்களாயின் தெரிவுசெய்த புள்ளியிலிருக்கும் தெரிவானது ஒருபடி பரவத்தொடங்கும் இவ்வாறு ஒவ்வொரு முறையும் குறித்த கட்டளையைக் கொடுத்து தெரிவை பரப்பிக்கொள்ள முடியும்.


இரண்டாவது கட்டளையையும் இவ்வாறே பயன்படுத்திக்கொள்ள முடியும் ஆனால் இந்த Shrink Selection Region கட்டளையானது தெரிவை படிப்படியாக குறைத்துக் கொண்டு போகும்.


Select Selection Boundary கட்டளையானது தெரிவிலுள்ள எல்லைகளின் புள்ளிகளை தெரிவிற்குட்படுத்தும். இவ்வாறு செய்துவிட்டு மூவ் ரூலை பயன்படுத்தி மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கி இழுத்து தேவையான வடிவமைப்பை அமைத்துக் கொள்ளமுடியும்.


இனி அடுத்த தொகுதியில் காணப்படும் கட்டளைகளை பார்ப்போமேயானால்... மேற்கொள்ளும் தெரிவுகளை மாற்றியமைப்பதற்கான (கன்வர்ட்) கட்டளைகளே கூடுதலாக காணப்படுகின்றது.


ஒப்ஜக்ட்டின் புள்ளியொன்றை தெரிவுசெய்து விட்டு இக்கட்டளைகள் ஒவ்வொன்றையும் முறையே கொடுப்பீர்களாயின் குறித்த அக்கட்டளைக்கு அமைய மாற்றியமைக்கப்படும். மேலதிக விளக்கத்திற்கு பின்வரும் படங்களை பார்க்கவும்.



Grow Selection Region



Shrink Selection Region



Select Selection Boundary


Select Selection Boundary கட்டளையைக் கொடுத்து ரூல்களைப் பயன்படுத்தி விரும்பிய தோற்றத்தை அமைக்கலாம்.


Convert Selection to Faces


Convert Selection to Edges


Convert Selection toVertices


Convert Selection toVertexFaces

இனி பொலிகன் மெனுவிலுள்ள முக்கிய கட்டளைகளைப் பார்ப்போம்...




பொலிகன்ஸ் மெனுவானது பொலிகன் ஒப்ஜக்ட்டின் சில முக்கிய தொழிற்பாடுகளைச் செய்யத் தேவையான அனைத்து கட்டளைகள் மற்றும் தேர்வுகளைக் கொண்டுள்ளது. இங்கு காணப்படும் முதலாவது கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Create Polgon Tool ஆகும் இதற்கமைய எமக்குத் தேவையானவாறு பொலிகன் அதாவது பல்கோண அமைப்பை வரைந்து பயன்படுத்திக்கொள்ளலாம்.



## Create Polgon Tool




இந்த ரூலை பெற்று ஏதாவது ஒரு Orthographic View இல் அதாவது 2D வியூவில் ஒரு முறை கிளிக் செய்து முதற் புள்ளியை ஏற்படுத்தவேண்டும் பின்பு இரண்டாவது மற்றும் மூன்றாவது புள்ளிகளை வையுங்கள் மூன்றாவது புள்ளியை வைக்கும் போது சிறிய புள்ளிகளைக் கொண்ட கோடு தோற்றுவிக்கப்படும் இதன்போது கீபோர்டில் எண்ரர் கீயை அழுத்திவீர்களாயின் ஒரு முக்கோணி அமைக்கப்படும். இவ்வாறு மூன்றிற்கு மேட்பட்ட புள்ளிகளை ஏற்படுத்தி பல்கோண அமைப்புக்களை இந்த ரூலினால் வரைந்துகொள்ளலாம்.

## Append to Polygon Tool

Append to Polygon Tool ரூலானது பொலிகன் ரூலாள் வரையப்பட்ட பொலிகன் ஒப்ஜக்ட்டிலிருந்து இன்னொரு பொலிகனை அமைப்பதற்கு பயன்படுத்தும் ரூலாகும். உதாரணத்திற்கு முக்கோணி ஒன்றை அமைத்துவிட்டு ரூலை பெற்று குறித்த அந்த முக்கோணியில் கிளிக் செய்வீர்களாயின் அம்முக்கோணியின் விளம்புக்கோடுகள் தடித்த கோடுகளாக மாற்றப்படும் அதேபோல் சிறிய புள்ளி ஒன்றும் தோற்றுவிக்கப்படும் அதுமட்டுமல்லாமல் முக்கோணியின் கோணச்சுற்றுக்கான வரைபும் தோற்றுவிக்கப்பட்டிருக்கும். இனி ரூலை புள்ளியின் நிலைக்கு நேராக சற்ற தூரத்தில் கிளிக்செய்து மற்றும் டிராக் செய்து தேவையான பொலிகனை அமைக்கலாம் இவ்வாறு விரும்பிய நிலைகளில் மற்றும் முப்பரிமான தோற்றத்தில் பல்கோணங்களை அமைத்துக்கொள்ளலாம்.

(தொடரும்)

## Screen Sever Shortcut ஐ Startup Folder இல் போடுவதற்கு....

விண்டோஸின் startup Folder இல் காணப்படுகின்ற எல்லா Shortcut களுமே விண்டோஸ் பூட் ஆனவுடன் இயங்கும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. டெஸ்க்ரொப்பில் உள்ள ஸ்கிறீன் சேவர் ஷோர்ட் கட்டை இங்கு நாம் கொண்டுவர வேண்டும்.

விண்டோஸ் எக்ஸ்புளோரரை இயக்குங்கள். C:/windows directory யின் கீழுள்ள டெஸ்க்ரொப் போல்டர் தெரிகிறதா என்று பாருங்கள். தெரியா விடில் view folder options கட்டளை யைக் கொடுத்து view டேபை அழுத்தி show all files என்ற செக்பொக்ஸை தேர்வு செய்து OK பட்டினை அழுத்துங்கள். டெஸ்க்ரொப் போல்டரின் கீழுள்ள 3do என்ற ஷோர்ட் கட்டைக் கொப்பி செய்யுங்கள்.

விண்டோஸ் எக்ஸ்புளோரரில் Windows/startmenu/programs/startup போல்டருக்குச் செல்லுங் கள். Copy செய்ததை இங்கு பேஸ்ட் செய்யுங்கள். விண்டோஸ் எக்ஸ்புளோரரை மூடி விடுங்கள்.

இனிமேல் நீங்கள் கம்ப்யூட் டரை பூட் செய்யும் போதெல்லாம் உங்களிடம் பாஸ்வேர்ட்டை ரைப் செய்யுமாறு விண்டோஸ் கேட்கும். சரியாக ரைப் செய்த நீங்கள் கம்ப்யூட்டரில் நுழைய லாம். பாஸ்வேர்ட்டை தவறுத லாக ரைப் செய்பவர்கள் கம்ப்யூட்டரில் நுழைய முடியாது.

உங்கள் நண்பர் ஓரளவு புத்திசாலி யாக இருந்தால் கம்ப்யூட்டரை Savemode பூட் செய்து விடுவார். அப்பொழுது பாஸ்வேர்ட் கேட்கப் படாது என் அவருக்குத் தெரியும். பின்பு Start Programs Startup கட்டளை ஆகியவற்றை Click செய்தால் நமது 3dfo தெரியும். அதை Right Click செய்து Delete கட்ட ளையை அவர் கொடுத்து விடுவார்.

உங்கள் பாதுகாப்பு அரணை அவர் உடைக்கக் காரணம் Startup Folder இல் அந்த Screen Server இன் Shortcut தெரிவது தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PHOTOSHOP 6.0/7.0

✍ : Aadhi
விரிவுரையாளர்
Aizen Institute of Information Technology

## விரும்பிய எழுத்துருவை உடனடியாகப் பெறுவதற்கு

அநேகமானோரின் கவலை Corel Draw ஐப் போன்று எழுத்துருக்களை செலக்ட் செய்யும் வசதி போட்டோஷொப்பில் கிடையாதென்று. அது ஓரளவு உண்மையென்றே கூற வேண்டும். ஏனெனில், Corel Draw ஐப் போன்று Font லிஸ்ட்டில் எழுத்துருக்களின் ஸ்ரைலைப் பார்க்க முடியாது தான். ஆனால் இங்கு வேறு விதமாகச் செய்ய முடியும்.





எழுத்தை ரைப் செய்து விட்டு அதை ஹைலைட் செய்து செலக்ட் செய்யுங்கள். பின்பு, ஒப்ஷன் பாரில் font field இல் கிளிக் செய்து ஹைலைட் செய்துவிட்டு கீபோர்ட்டில் அரோ கீகளை அழுத்துங்கள். ஒவ்வொரு எழுத்துருக்களின் ஸ்ரைல் தோன்றும். ஆனால், நீங்கள் ரைப் செய்துள்ள எழுத்துருக்களைச் சுற்றி கறுப்பு நிறத்தில் ஹைலைட் நிலை காணப்படும். இதை மறைக்க வேண்டுமெனில் எழுத்துக்களை ஹைலைட் செய்த பின்பு கீபோர்ட்டில் கொன்ட்ரோல் - H ஐ அழுத்திவிட்டு ஏனையவற்றைச் செய்யுங்கள்.

## பல ரைப் லேயர்களுக்கு ஒரே நேரத்தில் Font size மற்றும் Style

ஒன்றிற்கு மேற்பட்ட ரைப் லேயர்களிலுள்ள எழுத்துருக்களின் ஸ்டைல் மற்றும் சைஸ் போன்றவற்றை எவ்வாறு ஒரே நேரத்தில் மாற்றுவது?


இதற்கு முதலில் உங்கள் டொக்கியூமென்ட்டிலுள்ள அனைத்து ரைப் லேயரையும் லிங்க் (Link) செய்ய வேண்டும். லிங்க் செய்வது தெரியவில்லையெனில் கவனியுங்கள்...




முதலில் ஏதாவதொரு ரைப் லேயரை செலக்ட் செய்து விட்டு ஏனைய ரைப் லேயர்களில் காணப்படும் கண் அடையாளத்திற்கு அருகிலிருக்கும் பெட்டியில் கேசரால் கிளிக் செய்யுங்கள். (கேசர் கை அடையாளமாக மாறும்) உடனே சங்கிலி அடையாளம் தோன்றும். இதுவே லிங்க் செய்வதாகும். எல்லா ரைப் லேயரையும் இவ்வாறு லிங்க் செய்து விட்டு ஷிப்ட் கீயை அழுத்திக்கொண்டு Font size அல்லது Style ஐ மாற்றிப் பாருங்கள்.

## போல்ட் செய்ய முடியவில்லையாயின் Faux Bold செய்யுங்கள்

போட்டோஷொப்பில் சில எழுத்துருக்களுக்கு போல்ட் (Bold) மற்றும் இற்றாலிக் (Italic) ஸ்டைல்களை ஒப்ஷன் பாரிலுள்ள (Regular என்று காணப்படும் பகுதி) ஸ்டைல் பகுதியிலிருந்து கொடுக்க முடியாமலிருக்கும்.




ஒப்ஷன் பார் இல்லையென்றால் என்ன... இருக்கவே இருக்கு கரெக்டர் பெலட் (Character Palette)


போல்ட் அல்லது இற்றாலிக் செய்ய வேண்டிய எழுத்துக்களை ஹைலைட் செய்து விட்டு கரக்டர் பெலட்டிலுள்ள பொப்-அப் மெனுவைத் தோன்றச் செய்து அதில் முதலாவதாக காணப்படும் Faux Bold அல்லது Faux Italic கட்டளையைக் கொடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இதை தமிழ் எழுத்துருக்களுக்கும் கொடுத்துக் கொள்ளலாம்.

## எழுத்துருக்கள் மற்றும் அதன் அளவுகளை கீ போர்ட்டினால் தெரிவு செய்யுங்கள்



எழுத்து வேலைகளைச் செய்யும் போது எழுத்துருக்கள் மற்றும் அதன் அளவுகளைத் தெரிவு செய்வதற்கு கீபோர்ட்டில் வழியுண்டு. எழுத்துருக்களின் அளவுகளை அதிகரிக்க வேண்டுமென்றால் குறிப்பிட்ட பீல்ட் நேம் பகுதியில் கிளிக் செய்து ஹைலைட்டை செயற்படுத்தி கீபோர்ட்டில் மேல்-கீழ் அரோ கீகளை உபயோகிங்கள். என்ன.. அதிகரிக்கிறதா? இதே போல் எழுத்துருக்களின் அளவுகளை 10 பொயின்ற்றால் அதிகரிக்க அல்லது குறைக்க வேண்டுமாயின் ஷிப்ட் கீயை அழுத்திக் கொண்டு அரோக்கீகளை அழுத்துங்கள். இதே முறையில் எழுத்துருக்களையும் தெரிவு செய்யலாம்.


## ஸூம் ரூலை எளிதாகக் கையாளுங்கள்




ஸூம் ரூல (Zoom Tool) ஐக் கொண்டு வேலை செய்யும் போது ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் பெரிதாக்கிப் பார்ப்பதற்கு ஸூம் ரூலால் டிராக் செய்வது உங்களுக்குத் தெரிந்த விடயம். ஆனால் பெரிதாக இருக்கும் வின்டோஸை சிறிதாக்குவதற்கு என்ன வழி...

கீ போர்ட்டில் ஒல்ற்றர் கீயை அழுத்துவீர்களாயின் ரூலினுள் சய அடையாளம் தோன்றும். இப்பொழுது கிளிக் செய்து சிறிதாக்கலாம். அது மட்டுமல்ல ரூல் பொக்ஸில் ஸூம் ரூல் பகுதியில் டபுள் கிளிக் செய்து Actual Size இற்கு மாற்றலாம். கான்ட் ரூல் (Hand Tool) பகுதியில் டபுள் கிளிக் செய்து Fit On Screen நிலையை ஏற்படுத்தலாம்.


## Scroll செய்வதற்கு Hand Tool ஐப் பாவியுங்கள்




காட்சி அளவு பெரிதாக இருக்கும் படமொன்றை Scroll செய்து குறிப்பிட்ட பகுதியொன்றைத் தெரிவு செய்தல் கொஞ்சம் கஷ்டமான காரியம். இதற்கு Scroll பட்டினில் கை வைக்காமல் கான்ட் ரூலைப் பயன்படுத்துவது சிறந்தது. இதனால் படத்தை சிறிது சிறிதாக நகர்த்தலாம்.

இவ்வாறு காட்சி பெரிதாக்கப்பட்ட படத்தில் நீங்கள் எந்த ரூலைப் பாவித்துக் கொண்டிருந்தாலும் உடனடியாக (தற்காலிகமான) கான்ட் ரூலை ஏற்படுத்துவதற்கு கீபோர்ட்டில் ஸ்பேஸ் பாரை அழுத்துங்கள்.


## வின்டோ பெரிதாக வேண்டுமா?



ஸூம் ரூலில் வின்டோவை பெரிதாக்கும் பொழுது வின்டோ பெரிதாகாமல் உள்ளிருக்கும் காட்சியின் அளவு மட்டும் பெரிதாகிக் கொண்டு போகும். வின்டோவும் திரையின் அளவிற்கு பெரிதாக வேண்டுமாயின் ஒப்ஷன் பாரில் காணப்படும் Resize Windows To Fit செக்பொக்ஸைக் கிளிக் செய்யுங்கள். இதே போல் இன்னொன்றும் இருக்கிறது..

Fit to Windows பட்டினைக் (வட்டமிடப் பட்டுள்ளது) கிளிக் செய்தால் வின்டோவானது பெலட் இருக்கும் பகுதிக்கு அப்பால் செல்லாது. "இல்லை எனக்கு அதற்கு அப்பாலும் வின்டோ செல்ல வேண்டும்" என்று அடம்பிடிப்பவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Tables

MS-Word ல் உருவாக்கிய போலத்தான் இதுவும்.

Table எப்படியிருக்கும் என்று தெரியாதவர்களுக்கு ஒரு வெற்று Table ஐக் காட்டியுள்ளேன்.




மேலே உள்ள படத்தில் 5 றோக்களும் (Rows), 3 கொலங்களும் (Columns) உள்ளன. இடமிருந்து வலமாகப் போகும் bar போன்ற துண்டுகளை (படுத்துக் கொண்டிருப்பவை) Row என்றும் , மேலிருந்து கீழாக வரும் துண்டுகளை (நின்று கொண்டிருப்பவை) Column என்றும் குறிப்பிடுவர்.

ஒவ்வொரு கட்டத்தையும் ஒரு செல் (Cell) என்றழைக்கலாம். மேலே உள்ள ரேபிளில் 5x3=15 Cell கள் உள்ளன.

ரேபிளில் கட்டம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் விருப்பத்துக்கு ஏற்றவாறு எத்தனை Row மற்றும் Column களை வேண்டுமானாலும் அமைத்துக்கொள்ளலாம்.

Table ன் ஆரம்பத்தில் <table> tag உம், அதன் முடிவில் </table> ம் பயன்படுத்த வேண்டும். இது தவிர Table உருவாக்குவதற்கு மூன்று tag கள் அவசியம்.

அவை:

**<tr> - Table Row**

இது <table> tag ஐ அடுத்து வரும். <tr> tag ரேபிள் றோவை உருவாக்கும்.

**<th>- Table heading**

இது <tr> ஐ அடுத்து வரும். <th> ஐத் தொடர்ந்து வரும் தகவல் தலைப்பாக ஏற்றுக்கொள்ளப்படும். இதனால் இந்தத் தலைப்பு (heading), செல்லின் (Cell), நடுவில் (Center) **Bold** ஆகக் காட்சி அளிக்கும்.

**<td>- Table Data**


இது <th> ஐ அடுத்து வரும். இதுவும் <th> ஐப் போல செயல்படும். ஆனால், இதன் மூலம் கொடுக்கும் தகவல் **Bold** ஆக இருக்காது. Cell ன் இடது ஓரத்தில்(left) ஒட்டியபடி வரும்.

Table ஐ உருவாக்க அவசியமான <table>, <tr>,<th>, மற்றும் <td> tag களைப் பற்றிப் பார்த்தோம். இவற்றைப் பயன்படுத்தி எழுதிய ஒரு புரோக்கிராமைப் பார்ப்போமா?

```
<html>
<head>
<title>Narmadha Publications' Computer books</title>
</head><body>
<table>
<tr><th>Book title</th>
<th>First Publication</th>
<th>Price</th></tr>
<tr><td>BASIC Language</td>
<d>Dec/98</td>
<td>Rs.32</td></tr>
<tr><td>Internet</td>
<td>Nov/99</td>
<td>Rs.70</td></tr>
<tr><td>Database</td>
<td>Jan/2K</td>
<td>Rs.100</td></tr>
<tr><td>Windows 95 & 98</td>
<td>Apr/2K</td>
<td>Rs.80</td></tr>
<tr><td>MS-Word</td>
<td>Jun/2K</td>
<td>Rs.40</td></tr>
</table>
</body>
</html>
```

படம் 4-1

இந்தப் புரோக்கிராமை Notepad இல் ரைப் செய்து, htmltable.htm பெயரில் தேக்கி வையுங்கள். பின்னர் Internet Explorer ல் செயல்படுத்துங்கள்.




படம் 4-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தில் Table ஐப் பார்த்திருப்பீர்கள். இந்த Table ல் ஒரு சிறு மாற்றத்தைச் செய்யப் போகிறேன்.

<P> tag ல் சில attributes களைப் பார்த்தோம் அல்லவா? அதே போல <table> tag இலும் சில attributes கள் உள்ளன.

## Border attribute

படம் 4-2 ஐ மீண்டும் பாருங்கள். இதில் போர்டரைச் சேர்த்தால், பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். படம் 4-1 உள்ள புரோக்கிராமுக்குச் செல்லுங்கள். இதில் உள்ள <table> tag உடன் border ஐப் புகுத்தி, <table border> ஆக்கிவிடுங்கள். இப்பொழுது இதை save செய்து, பின்னர் செயல்படுத்துங்கள்.

| Book title | First Publication | Price |
|---|---|---|
| BASIC Language | Dec/98 | Rs.32 |
| Internet | Nov/99 | Rs.70 |
| Database | Jan/2K | Rs.100 |
| Windows 95 & 98 | Apr/2K | Rs.80 |
| MS-Word | Jun/2K | Rs.40 |

[Table with Border] படம் 4-3

படத்தைப் பார்க்கும் போது border ன் மகிமை உங்களுக்குப் புரிந்திருக்கும்.

## Table அளவை மாற்ற Width, மற்றும் Height attributes

நீங்கள் Cell க்குள் புகுத்தும் தகவலுக்கு ஏற்ப, அதன் அளவும், அதனால் Table அளவும் விரியும். எனினும், நீங்கள் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு Table இன் உயரம் (Hight), மற்றும் அகலத்தை (Width) ஐ மாற்றலாம். இவற்றை <table> tag உடன் சேர்த்து எப்படி கொடுக்கின்றோம் என்று பாருங்கள்.

<table width = "600" height = "400"

இதில் 600 மற்றும் 400 பிக்சல்ஸைக் (Pixcels) குறிக்கும். Table இன் அளவு மட்டுமல்லாமல் செல்லின் அளவையும் மாற்றலாம்.

```
<table>
<tr>
<td width = "20%" > Small Cell </td>
<td width = "80%" > big cell </td>
</tr>
</table>
```

Table அகலத்தில் 20% முதல் செல்லின் அகலமாக அமையும். இரண்டாவது செல்லின் அகலம், Table அகலத்தில் 80% ஆக இருக்கும். செல்லின் அகலம், Table அகலத்தில் 80% ஆக இருக்கும். செல்லின் அளவை மாற்ற Pixels க்குப் பதில் சதவிகிதத்திலும் கொடுக்கலாம்.

## bgcolor attribute

திரையின் பின்னணி நிறத்தை மாற்றலாம்.

<table bgcolor = "yellow">

bg என்பது Background இன் சுருக்கம். Table நிறத்தை முழுவதும் மஞ்சளாக மாற்றி விட்டோம். குறிப்பிட்ட Row, அல்லது Cell இன் நிறத்தை மட்டும் மாற்ற விரும்பினால், bgcolor ஐ <tr>, <td> அல்லது <th> tag உடன் பயன்படுத்தலாம்.


## Align attribute

<P> உடன் பயன்படுத்திய align attribute களை <tr>, <th> மற்றும் <td> tag களுடன் பயன்படுத்தலாம்.

உதாரணம் : <td align = "Center">

## Valign attribute

Cell ன் உயரம் அதிகமாக இருந்தால், Valign ஐப் பயன்படுத்தலாம். கீழே உள்ள படத்தைப் பார்த்தால், Valign இன் பலம் உங்களுக்குப் புரியும். மூன்று செல்களைப் படத்தில் பார்க்கிறீர்கள்.




Valign (படம்: 4-4)

செல்களில் தகவல் எங்கு வரவேண்டும் என்று Valign சொல்கிறது.

```
<td Valign = "top" > One </td>
<td Valign = "middle"> Two </td>
<td Valign = "bottom"> Three </td>
```

**Valign** ஐ மேலே குறிப்பிட்ட "top" , "middle" , "bottom" வழிகளில் செயல் படுத்தலாம். இந்த **Valign** ஐ <tr> , <th> மற்றும் <td> tag களில் பயன்படுத்தலாம்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Adobe Photoshop ....


(29 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதோ... இந்த க்ளு...

ஒப்ஷன் பாரில் இரண்டாவதாகக் காணப்படும் இக்னோர் பெலட்ஸ் (Ignore Palettes) செக் பொக்ஸை கிளிக் செய்துவிட்டு செய்து பாருங்கள்.

### கேசரை பெட்டியினுள் கொண்டு செல்லத் தேவையில்லை...

ஒப்ஷன் பாரில் காணப்படும் Feather, Tolerence, Font size போன்றவற்றில் மாற்றங்கள் செய்வதற்கு அடிக்கடி கேசரைக் கொண்டு சென்று ஹைலைற் செய்யவேண்டியேற்படும். இது இன்றைய அவசர யுகத்திற்கு தலைவலி தரும் விடயமாக மேற்கத்தேயவர்களால் கருதப்படுவதால் இதையும் நிவர்த்தி செய்துள்ளார்கள் போட்டோஷொப்பின் பொறியியலாளர்கள்.




ஆம், கேசரை பெட்டியினுள் கொண்டு செல்லத் தேவையில்லை just..., Field Name பகுதியில் கிளிக் செய்தால் போதும். இதே முறையை செக் பொக்ஸினுள் கையாளலாம்.

(தொடரும்)


### கம்யூட்டர் எக்ஸ்ப்ரஸ் வாசகர்களுக்கு...!



இதுவரை வெளிவந்த சகல கம்ப்யூட்டர் எக்ஸ்ப்ரஸ் இதழ்களையும் நீங்கள் பெற்றுக் கொள்ள விரும்பினால் கீழ்க்கண்ட முகவரிக்கு வெள்ளவத்தைத் தபாலகத்தில் மாற்றிக் கொள்ளக் கூடியதாக காசுக் கட்டளையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

மலர் 01 இதழ் 7 இலிருந்து *23/=* வீதம் தபால் கட்டணமாக *04/=* சேர்த்து அனுப்பவும்.

**Computer Express**

No. 07, 57th Lane (Off Rudra Mawatha), Colombo-06. Sri Lanka.
Tel: 0777-222422, 011-2361381

### எக்ஸ்ப்ரஸ் வேகத்தில் பெற...!

உங்கள் பிரதிக்கு இன்றே முந்துங்கள். நீங்கள் எமது சந்தாதாரராக இணைந்து 'கம்ப்யூட்டர் எக்ஸ்ப்ரஸ்' தவறாது கிடைப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

**விண்ணப்பப்படிவம்**

மாதாமாதம் வெளிவரும் 'கம்ப்யூட்டர் எக்ஸ்ப்ரஸ்' தமிழ் சஞ்சிகையை நான் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். அதற்கான கட்டணமாக (தபால் கட்டணத்துடன்)

| | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| ஆறு மாதம் | - 162/= | ☐ | $ 7 | ☐ |
| ஒரு வருடம் | - 324/= | ☐ | $ 14 | ☐ |
| இரண்டு வருடம் | - 648/= | ☐ | $ 28 | ☐ |

ரூபாவை / டொலரை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

| | |
|---|---|
| பெயர் | |
| முகவரி | |
| ✆ இல. | |
| மின்னஞ்சல் | |

நான் இத்துடன் ................................
இலக்கக் காசோலையை / காசுக் கட்டளையை 'AIZEN' என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

..............................................................
கையொப்பம்

பணத்தைக் காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ 'AIZEN' என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும். காசுக்கட்டளைகளை வெள்ளவத்தை தபாலகத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

Mail Coupon To:

No. 07, 57th Lane, (off Rudra Mawatha)
Colombo-06. Sri Lanka.
☎ : 01-2361381, 0777-222422
E.mail : info@comxpress.info
Website: www.comxpress.info




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் திறமையை மட்டுமின்றி தகுதியையும் உருவாக்குவோம்



**8500 க்கு மேற்பட்ட ஹார்ட்வெயார் மற்றும் 750 க்கு மேற்பட்ட நெற்வேக் தொழில்துறையினருக்கு பயிற்சியளித்த நிபுணர்களிடம் கற்றுக்கொள்ளுங்கள**

## *Diploma in Hardware Engineering with Networking*

100% JOB ORIENTED PRACTICAL TRAINING COURSE

மேற்படி பயிற்சி, IT துறையில் நிலைக்க விரும்புபவர்களுக்குஉன்னதமான பயிற்சி உங்களுடைய திறமையின் அடிப்படையில் Microsoft / CISCO, LINUX போன்ற வித்தியாசமான பாதைகளில் நாம் உங்களை வழிநடத்துவோம் உலகலாவிய உயர் வருமானம் தரும் துறைகளுக்கு இட்டுச்செல்வோம்

FREE

இலவச வழிகாட்டலுக்காக எம்முடன் தெடர்புகொள்க
(பெற்றோர் / மாணவர் / தொழில் செய்வோர்)
நியமனங்களுக்காக : Tel : 2581581, 0777322890

Course Fee: Rs. 3800

Diploma in Hardware Engineering with Networking → Diploma in Network Administration →
- Cisco Path → (CCNA,CCNP)
- Microsoft Path → (MCP, MCSA, MCSE)
- Linux Path → (RHCT, RHCE)

The Premier Training Institution for Hardware & Networking In Sri Lanka

## *Diploma in Network Administration*

This Diploma Provides 100% practical knowledge necessary to plan, Install, Configure and maintain both MS Windows Server & Professional Network, Backup Network with unattended Installation, Disk management, Internet Information Web sever (IIS), Domain Naming System Server (DNS), DHCP, Proxy Server, E-Mail Server and Remote Access Server (RAS) In a real life Environment Individual Practice on Cabling
A Person Competent in these areas could work in a network environment confidently.

Packs

Course Fee: 7350/-

Free Linux Software CD

Learn To Become Linux Certified

Course Fee: 8750/-

## *Microsoft Certified Systems Engineer (MCSE)*

Introducing Windows 2003 Server

Microsoft → Microsoft → Microsoft CERTIFIED

Course Fee: 34000/-

**TURNKEY**
**IT TRAINING**

562/15B,Lower Bagathelle Road Colombo-03
Tel:2581581, 2595337 Fax: 2581581
Email: turnkeyit@sltnet.lk

**KANDY**
604, Peradeniya Road, Kandy Tel: 0814-470480

**NUGEGODA**
3/1, Edirigoda Mawatha, Nugegoda (Near NSB - Off Stanly Thilakarathne Mawatha)
Tel: 2768337

**KURUNEGALA**
145, Puttalam Rd, Kurunegala Tel:03722-30099

**Registered with Tertiary and Vocational Training Commission of Sri Lanka**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100% Job Oriented Course

# Be A Most Wanted Network Professional

2504023
2552819

Cisco

Linux

Microsoft

**CCNA 640-801** Rs.15000/-

**CCNP NEW** Routing/ Switching/ Remote access/ Trouble shooting — per module Rs.20000/-

**CCIE theory** Rs.35000/-

## Diploma in Hardware & Advanced Networking

PC Assembling and Troubleshooting,
LAN, WAN Networking, Cabling, Crimping
Windows 2000 Servers configurations
Linux Server Configurations, firewall
Cisco Router Introduction

only → **Rs.3500/-**

| MCP (2 Modules) | MCSA | MCSE | MCDBA Per Module |
|---|---|---|---|
| Rs. 12000/- | Rs. 20000/- | Rs. 12000/- | Rs. 5000/- |

## Linux System and Network Administrations (Leading to RHCE)

*Rs. 15000/-*

Introduction ,Disk Quotas, DNS, Sendmail,Clustering, PAM and VPN Installation Methods,Linux File System, Diskless Nodes, DHCP Server/Client, NFS, Samba Server, Squid, Apache, IPTables,

- *Highest Passing rates in the Island*
- *Highly Qualified local & Foreign Faculties*
- *Interactive Friendly class room sessions, lab Facilities*
- *Internationally Recognized Certifications with Realtime* exposure

WinSYS

# WinSYS Networks (Pvt) Ltd

HI-TECH TRAINING & CONSULTING

No. 31, 42nd Lane. Wellawatta. TP: 011-2504023/ 2552819
www.winsysnetworks.com Mail: info@winsysnetworks.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org